# அரசியல் எனக்குப் பிடிக்கும்

ச.தமிழ்செல்வன்



இலட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையான நூல்

Scanned by CamScanner

# அரசியல் எனக்குப் பிடிக்கும்

ச. தமிழ்ச்செல்வன்

பாரதி புத்தகாலயம்

7, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
தொலைபேசி : 04424332424, 24332924

ரூ.20/-

Scanned by CamScanner

# அணிந்துரை

அரசியல் என்றால் முகம் சுளிப்பவர்கள் உண்டு. தேர்தல் வந்தால் ஓட்டு போடுவோம்; ஆனால் அரசியலில் இருந்து விலகியே நிற்போம் என்று சொல்பவர்கள் உண்டு. மாநிலத்தில், மத்திய அரசில் அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு, வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது போன்ற செய்திகளை கேட்போர் பொதுவாகவே அரசியலை வெறுப்பதுண்டு.

நேற்று ஒரு கட்சியில் இருந்தார்; இன்று வேறு கட்சிக்கு தாவி விட்டார்; அவர் போகாத கட்சி இல்லை என்று செய்தி வருகிறபோது பொதுவாக அரசியல்வாதிகள் இப்படித்தான் என்று கருதுபவர்கள் உண்டு.

அரசியலில் இத்தகைய நிகழ்ச்சி போக்குகளை ஆதாரமாக காட்டி 'அரசியல் என்பது ஒரு சிறந்த தொழிலாகிவிட்டது; அதிலும் மூலதனமில்லாத தொழிலாகி விட்டது' என தலையங்கம் எழுதி அரசியல்வாதிகளை ஒருசில நாளேடுகள் கடுமையாக விமர்சித்தன.

அரசியல் என்பது மக்களுக்கு சேவை செய்ய கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதுவாரும் உண்டு. அரசியல் என்பது பிழைப்பு அல்ல; மாறாக மக்களுக்கு அர்ப்பணிப்போடு செய்யும் உழைப்பு என்ற மனநிறைவோடு செயல்பட்டு வருபவர்களும் உண்டு.

வசதியற்றவர், வசதி படைத்தவர் என்ற பாகுபாடின்றி அனைவரது அன்றாட தேவைகளை சாதகமாகவோ பாதகமாகவோ தீர்மானிப்பது அரசுதான். குறிப்பாக ஏழை, எளிய, உழைப்பாளி மக்களின் வாழ்க்கையில் குவிந்து கிடக்கும் அத்துணை பிரச்சினைகளுக்கும் அடிப்படையானது அரசு கடைப்பிடிக்கும் ஆட்சிக் கொள்கைதான்.

ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன, நான் உண்டு என் வேலை உண்டு; எனக்கு அரசியல் பிடிக்காது என்று ஒதுங்கி நிற்போர் ஒருவகையில் அரசின் நடவடிக்கையை மறைமுகமாக ஆதரிப்பவராகி விடுகிறார். நமது வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் அரசியல் இரண்டற கலந்து கிடக்கிறது. ஒருவரின் வாழ்க்கையின் ஏற்ற இறக்கத்திற்கு அரசும் காரணம் என்கிறபோது அந்த அரசு பற்றி கவலைப்படாமல் இருக்க முடியுமா? அப்படி கவலைப்படுவதுதான் அரசியல்.

அரசு, அரசியல், அரசாங்கம் போன்றவற்றை எளிய நடையில் கலந்துரையாடல் பாணியில் பத்து சிறுசிறு அத்தியாயங்களில்

Scanned by CamScanner

தமிழ்ச்செல்வன் விளக்கி இருக்கிறார். அரசைப் பற்றி விளக்குகிற போது அது எல்லோருக்கும் பொதுவானது, பாரபட்சமற்றது என்ற தோற்றம் இருப்பினும் உண்மையில் அரசு சமூகத்தில் உள்ள ஒரு சாராருக்குத்தான் சாதகமாக இருக்கிறது என்ற உண்மையை உலகுக்கு வெளிச்சம் போட்டு காட்டிய இரு பெரும் மேதைகள் மார்க்ஸ், ஏங்கல்ஸ் உருவாக்கிய மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையில் நூலாசிரியர் விளக்குகிறார்.

அரசு மட்டுமா? இயங்கிவரும் அரசியல் கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் நலன்களை பாதுகாக்க பாடுபடும் அமைப்புகள்தான், அது எல்லோருக்கும் பொதுவானது அல்ல என்பதையும் படிப்போர் ஏற்றுக்கொள்ளும்படி விளக்கி இருக்கிறார். நிலமற்ற விவசாய தொழிலாளி முதல் நிலவுடைமையாளர் வரையிலும் கூலித் தொழிலாளி முதல் தொழிலதிபர் வரையிலும் இதற்கு இடைப்பட்ட நடுத்தரப் பகுதியினர் என நாம் வாழும் இச்சமூகம் ஒரு சமதளப் பிரதேசம் போன்றதல்ல. உழைத்து வாழ்பவர், பிறர் உழைப்பில் வாழ்பவர் என இரண்டு பகுதிகளாக, இரண்டு வர்க்கங்களாக சமூகம் பிரிந்து கிடக்கிறபோது எந்த ஒரு அரசியல் கட்சியும் எந்த ஒரு அரசும் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க முடியாது என்ற நுட்பமான அம்சத்தை நூலாசிரியர் தெளிவாக விளக்கி இருக்கிறார். இதற்காக மனிதகுல வரலாற்றை சுருக்கச் சொல்லி விளங்க வைக்கிறார்.

உழைப்பாளி மக்கள் மத்தியில் அரசியல் பற்றியும், அரசு பற்றியும் எழும் பல கேள்விகளுக்கு விடையளிப்பதாக இச்சிறு நூல் அமைந்துள்ளது.

புதிய பாணியில் இந்நூலை எழுதியுள்ள தமிழ்ச்செல்வன் தொழிற்சங்கப் பணியாற்றிக் கொண்டே அறிவொளி இயக்கத்தில் அர்ப்பணிப்போடு செயலாற்றினார். பரந்துபட்ட மக்களோடு நெருக்கமாக இருந்து படிப்பறியா மக்கள் மத்தியில் ஆற்றிய பணியின் அனுபவத்தில் இருந்து எளிய முறையில் இந்நூலை எழுதி இருக்கிறார்.

ஜி. ராமகிருஷ்ணன்,

பாரதி புத்தகாலயம்

Scanned by CamScanner

# நமக்கு எதுக்கு வம்பு?

"இவ்விடம் அரசியல் பேசக்கூடாது" என்று சில டீக்கடைகளி லும் முடி திருத்தும் நிலையங்களிலும் எழுதிப்போட்டிருப்பார்கள். பொது இடங்களில் புகை பிடித்தல் தவறு என்பது போல அரசியலை யும் அதில் சேர்த்து விட்டார்கள். சின்னப்பிள்ளைகள் பீடி, சிகரெட் குடிக்கக்கூடாது. அரசியலிலும் ஈடுபடக்கூடாது. எந்தத் தாயும் தகப்பனும் தன் பிள்ளைகள் அரசியலில் ஈடுபடுவதை பொதுவாக விரும்புவதில்லை. காசு பணம் சம்பாதிக்க வழி உள்ள சில கட்சிக் காரர்கள் வேண்டுமானால் பிள்ளைகளை அரசியலுக்கு அனுப்பலாம்.




பொதுவாக யாரிடம் கேட்டாலும் நமக்கு எதுக்குங்க அரசிய லெல்லாம் என்று சொல்லுவார்கள். உண்டான சோலியப் பாக்கவே நமக்கு நேரம் இல்லை. இதிலெ எங்கே அரசியலைப்பத்திக் கவலைப் பட? என்பார்கள். பொதுவாக நாம் என்ன நினைக்கிறோம் என்றால்,

மாணவர்கள் என்றால் படிக்கவேண்டும்

இளைஞர்கள் வேலை தேடவேண்டும்

தொழிலாளிகள் ஒழுங்காக வேலை பார்க்கவேண்டும்

விவசாயிகள் விவசாயம் செய்யவேண்டும்

ஆசிரியர்கள் பாடம் நடத்தவேண்டும்

கண்டக்டர் விசில் கொடுக்கவேண்டும்

டிரைவர் வண்டி ஓட்டவேண்டும்

பெண்கள் சோறு பொங்கவேண்டும்.

Scanned by CamScanner

- யாருமே அரசியலுக்குப்போய்விடக்கூடாது. அது நம்ம வேலை இல்லை. ஆனால் தேர்தல் வந்தால் மட்டும் ஒரு ரெண்டு மாசத்துக்கு அவன் அப்படி இவன் இப்படி அவ என்ன கிழிச்சா என்று உற்சாக மாகப் பேசுவோம். பிறகு அஞ்சு வருசத்துக்கு எவன் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன என்று இருந்து விடுவது. கேட்டால், அரசியலே சாக்கடை சார்... என்பது. இது ஒரு ரகம்.

இன்னொரு பக்கம் - யாராவது கமுக்கமாகச் சில காரியங்களைச் செய்தால் "ஏ... அவன் பயங்கர பாலிட்டிக்ஸ் பண்றாம்ப்பா" என்போம்.

"உங்க பாலிடிக்ஸ்லே என்னை மாட்டிவிடாதிங்க"

"நாம ஒண்ணும் இங்க பாலிடிக்ஸ் பண்ண வரலே"

என்றெல்லாம் பேசுகிறோம். இந்த இடத்தில் அரசியல் என்றால் சதி, வஞ்சகம், சூது என்ற அர்த்தத்தில்தான் பேசுகிறோம்.

இன்னும் ஒரு வாதம் உண்டு. "இப்பல்லாம் என்ன சார் அரசியல் நடக்கு? கக்கன், காமராஜ் காலம் மாதிரியா இப்ப இருக்கு? அரசியல்னாலே துட்டு அடிக்கிறதுன்னு ஆகிப்போச்சு. நல்ல தமிழ் பேசி துட்டு அடிக்கப்போறியா இல்லாட்டி கான்வெண்ட் இங்கிலீஷ் பேசித் துட்டு அடிக்கப்போறியாங்கிறதுதான் கேள்வி. ஆனால் கக்கன், காமராஜர் காலத்தில் என்ன பேச்சு இருந்ததென்றால் "என்ன சொல்லுங்க வெள்ளைக்காரனை மாதிரி நிர்வாகம் பண்ண முடியுமா?"

இன்னொரு பக்கம் லஞ்சம், ஊழல்கூடப் பரவாயில்லை. அடிதடி, வெட்டுகுத்து, சொந்தக் கட்சிக்காரனையே போட்டுத்தள்றது - இதெல்லாம் ரொம்ப சர்வ சாதாரணமாப் போச்சு. இதுக்கெல்லாம் மேலே தலைவர்கள், தலைவிகள் காலில் விழுந்து கும்பிடுகிற அசிங்கம். சேச்சே... மானம் ரோஷம் உள்ளவன் அரசியலுக்குப் போவானா?"

மேலே சொன்ன வாதங்களில் பொய் ஒன்றும் இல்லைதான். ஆனால், இவையே முழு உண்மையும் இல்லை. இது மட்டுமே அரசியல் என்பதும் சரி இல்லை. காலம் காலமாக - ராஜாக்கள் ஆண்ட காலம் முதல்-அரசியல் என்றால் அது அரண்மனைக்குள் நடப்பது - மந்திரிகளும் சேனாதிபதிகளும் ராஜரிஷிகளும் சகுனிச் சூதுகளும் சம்பந்தப்பட்டது என்றுதான் மக்களுக்கு அறிமுகம் ஆகியுள்ளது. அரண்மனை அரசியலை விட்டு மக்கள் வெகுதூரத்தில் வைக்கப்பட்டிருந்தனர். ஆண்டாண்டு காலமாக அப்படி தொலைவிலேயே இருந்த மக்கள் மனங்களில் "இது நமக்குச் சம்பந்தமில்லாதது - ராசாங்க விசயம்" என்று பதிவாகி விட்டது.

"விரலுக்குத் தக்கன வீக்கம் வேணும்"

"ராஜா வீட்டு நாய் சிம்மாசனத்திலே ஏறுதுன்னு

Scanned by CamScanner

வண்ணான் வீட்டு நாய் வெள்ளாவியில் ஏறலாமா?”

“உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியுமா?”

“ஏழை சொல் அம்பலம் ஏறுமா?”

ராஜாக்கள் போய், வெள்ளைக்காரனின் காலனி ஆட்சி வந்து அதுவும் போய் மக்களாட்சி வந்து 57 வருசம் ஓடிவிட்டது. பல தலைமுறைகள் வாழ்ந்தும் முடிந்து விட்டது. ஆனாலும் ஏழை எளிய உழைப்பாளி மக்களின் மனசில் படிந்துவிட்ட தாழ்வு மனப்பான்மை - அரசியல் நம்மோடு தொடர்புடையது அல்ல என்ற நினைப்பு இன்றளவும் நீடிக்கிறது.

ஆனால், ஒரு முக்கியமான உண்மையை நாம் எல்லோரும் மறந்து விடுகிறோம். சாக்கடை என்றும் மானங்கெட்டது என்றும் நாம் பேசுவது இந்த அஞ்சு வருசத்துக்கு ஒருமுறை வருகிற தேர்தல் அரசியலைத்தான். இப்படி இந்த அரசியலை சாக்கடையாக வைத்திருப்பதன் மூலம் நல்லவர்கள், உழைப்பாளிகள் இதை விட்டு விலகி இருக்கும்படி செய்யப்படுகிறது. இது ஏதோ தற்செயலாக நடப்பதுபோலத் தோன்றினாலும் இது திட்டமிடப்பட்ட சதியாகும். தொழிலாளிகளை, விவசாயிகளை, நடுத்தர வர்க்கத்தை - என பாடுபடும் எல்லோரையும் மேலும் மேலும் அரசியலற்றவர்களாக ஆக்குவதுதான் இதன் பின்னணியில் உள்ள உண்மையான அரசியலாகும்.

நம் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் பல முடிவுகளை எடுப்பது அரசியல் அல்லவா? அதுபற்றி நாம் அக்கறை இல்லாமல் இருப்பது எப்படி சரியாகும்? உன்னை என்ன செய்யிறதுன்னு அங்க நாலு பேர் உட்கார்ந்து முடிவு செஞ்சிக்கிட்டு இருக்கான். நீ அதைப்பத்திக் கவலைப்படாம இருப்பியா? என்பதுதான் கேள்வி.

ஆகவே அரசியல் என்பது—

Scanned by CamScanner

# வித விதமாய் அரசுகள் - ஆட்சிகள்

அரசியல் என்ற சொல்லில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. அரசு+இயல்=அரசியல். அதாவது அரசு சம்பந்தப்பட்டதுதான் அரசியல். அப்படியானால் அரசு என்றால் என்ன?

தமிழக அர்சு என்கிறோம். மத்திய அரசு என்கிறோம். தி. மு. க. அரசு - அ. தி. மு. க அரசு என்கிறோம். அப்புறம் அரசாங்கம் என்று ஒரு வார்த்தை இருக்கிறது. தனியார் துறையா, அரசுத் துறையா என்கிற இடத்திலும் அரசு வருகிறது. ஆங்கில அகராதியில் அரசு என்பதற்கு ஸ்டேட் (state) என்று போட்டிருக்கிறான். ஸ்டேட் என்றால் மாநிலம் என்று ஒரு அர்த்தம் வேறு போட்டிருக்கிறான். அந்த ஸ்டேட் வேறு இந்த ஸ்டேட் வேறா?

அட, எதைத்தானய்யா அரசு என்கிறோம்?

இதே கேள்வியை கொஞ்சம் மாற்றி போட்டு எதையெல்லாம் அரசு என்கிறோம்? என்று கேட்டால் மள மளவென்று பதில் வரும்:

கலெக்டர் அபீஸ், தாலுகா ஆபீஸ், பஞ்சாயத்து யூனியன், போலீஸ், ஜெயில், கோர்ட், போஸ்ட் ஆபீஸ், ராணுவம், சட்டமன்றம், பாராளு மன்றம், அமைச்சர்கள், ஆளும்கட்சி - எதிர்க்கட்சி, ஏராளமான அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் (அரசு சாராயக்கடை உட்பட)

இப்படி அரசு என்ற வார்த்தையைக் கேட்டதும் நமக்கு இத்தனையும் ஞாபகத்துக்கு வருகிறது. களா புளா என்று மேலே உள்ள எல்லாத்தையும் ஒரு ஒழுங்குபடுத்தி வரிசைப்படுத்தினால் கீழே உள்ள நான்கு பிரிவுகளில் அடங்கி விடும்:




Scanned by CamScanner




இப்படி இந்த நான்கும் சேர்ந்ததுதான் அரசு. இந்த அரசைப் பற்றியதுதான் அரசியல். ஆனால் நாம் இந்த நான்கில் ஒரே ஒரு பிரிவான சட்டமன்றம்/ பாராளுமன்றம் மற்றும் அதில் ஐந்து ஆண்டுக ளுக்கு ஒருமுறை யார் போய் உட்கார்வது என்பதுதான் அரசியல் என்று நம்பிக் கொண்டு குழம்பிக்கிடக் கிறோம். முதல் மூன்று பிரிவுகளான நிர்வாகம், ராணுவம்/போலீஸ்/ சிறைச்சாலை, நீதி இவைதான் நிரந்தரமாக இருக்கின்றன. இவை இல்லாமல் அரசு ஏது?

பல நாடுகளில் சட்டமன்றம் பாராளுமன்றம் இல்லாமலே கூட அரசு என்பது இருக்கிறது. ரொம்ப தூரம் போகவேண்டாம். நமது அண்டை நாடான பாகிஸ்தானைப் பாருங்கள். கொஞ்ச நாள் சட்டமன்றம் தேர்தல் எல்லாம் இருக்கும் பிறகு கொஞ்ச நாள் அதெல்லாம் இல்லாத நிலை இருக்கும். ஆனால், எப்போதும் அரசு இருந்து கொண்டுதான் இருக்கும். இந்த அரசை நாம் தேர்ந் தெடுப்பதில்லை அது இருந்துகொண்டே அல்லவா இருக்கிறது. நீதி, நிர்வாகம், ராணுவம், போலீஸ் இதையெல்லாம் நாம் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுப்பதில்லை.

ஆகவே, நமது விருப்பம்,தேர்வுகளுக்கு அப்பால் கல்லாக நின்று நம்மீது இடையறாது ஆட்சி செலுத்திக்கொண்டே இருக்கிறது அரசு. கீழே பட்டியலிட்டதுபோல் ஆட்சிகளில் பல ரகம் உண்டு. ஆனால், அரசு ஒன்றுதான்.

1. **ராணுவ ஆட்சி** : ஒரு ராணுவ அதிகாரியே அதிபராக இருப்பார். அமைச்சரவை இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். அதை அதிபரே நியமிப்பார் அல்லது அதற்கு மட்டும் தேர்தல் நடக்கலாம் (பாகிஸ்தான்,மியான்மர் மற்றும் பல தென் அமெரிக்க நாடுகளில் இருப்பது).
2. **முடியாட்சி** : மன்னராட்சி முறை - ஜோர்டானிலும் பல அரபு நாடுகளிலும் இருப்பது. அரபு மன்னர்கள் எமிர் என அழைக்கப் படுவர் - அந்நாடு எமிரேட் என அழைக்கப்படும்.
3. **சர்வாதிகார ஆட்சி** : ஒரு தனி நபர் சர்வ அதிகாரமும் படைத்த வராக இருப்பார். அவர் இட்டதுதான் சட்டம். சென்ற

நூற்றாண்டில் பல தென் அமெரிக்க நாடுகளில் இந்த ஆட்சிமுறை இருந்தது.

உதாரணமாக, சிலி நாட்டில் - ஜெனரல் அகஸ்டோ பினோசெட் அர்ஜெண்டினாவில் 1. ஜூவான் மானுவெல் டி-ரோஸஸ் 2. ஜூவான் பெரோன், மெக்ஸிகோவில் - அந்தொனியோ-லொபெஸ்-டி-சண்டா அன்னா



முசோலினி ஹிட்லர்



பிராங்கோ

4. **பாசிஸ்ட் ஆட்சி :** நாட்டு மக்களை ஒரு போலி தேசிய உணர்வில் அமிழ்த்தி வைத்து - பிற தேசிய இனங்களை அழித்தொழிப்பது - தனி நபரோ ஒரு குழுவோ இப் பணியைத் தலைமை தாங்கும்.



ஜெர்மனியில் - ஹிட்லர் (1933-1945)

இத்தாலியில் - முசோலினி(1922-1943)

ஸ்பெயினில் - பிரெடெரிக்கோ பிராங்கோ (1939-1975)

இந்தியாவில் இப்போது பா. ஜ. க தலைமையில் வளர்ந்து வரும் இந்துத்வா. குஜராத்தில் முஸ்லீம் மக்களைக் கொன்று குவித்து இந்தியாவுக்கே முன்மாதிரியாக ஒரு சோதனை செய்துள்ளதாகக் கூறுகிறது. நாடு முழுவதும் சக்தி மிக்க ஒரு கட்சியாக பா. ஜ. க. ஆட்சிக்கு வருமானால் அது பாஸிஸ்ட் ஆட்சியாகவே இருக்கும் என்று வரலாற்றாளர்களும் அரசியல் அறிஞர்களும் கணிக்கிறார்கள்.

5. **காலனி ஆட்சி :** எங்கோ இருக்கும் ஒரு நாடு வேறு எங்கோ இருக்கும் பிற நாடுகளை அடிமைப்படுத்தி ஆள்வது. இந்தியாவை பிரிட்டன் ஆண்டது போல - பல ஆப்பிரிக்க நாடுகளை ஐரோப்பிய நாடுகள் ஆண்டது போல.

6. **ஜனநாயக ஆட்சி :** தேர்தல் மூலம் ஓட்டுப்போட்டு ஆட்சியை மக்கள் தேர்ந்தெடுப்பது. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் பல நாடுகளில் இருப்பது.

இப்படி ரகரகமாக ஆட்சி முறைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக இருக்கின்றன. இதைத்தான் அரசாங்கம் என்பார்கள். ஆனால் அரசு என்பது வேறு. அது எப்போதும் எல்லா நாடுகளிலும் ஒரே வேலையைத்தான் செய்து வந்துள்ளது; நீதி, நிர்வாகம், ராணுவம்/ போலீஸ் தான். ஒரே நாட்டிலேயே கூட மேலே சொன்ன பலவிதமான

Scanned by CamScanner




ஆட்சி முறைகளும் அமுலில் இருந்தது உண்டு. நமது இந்திய நாட்டிலும்கூட அந்தக்காலத்தில் ராஜாக்கள் ஆண்ட முடியாட்சி இருந்தது. பிறகு வெள்ளைக்காரன் ஆண்ட காலனி ஆட்சி இருந்தது. 1947க்குப்பிறகு ஜனநாயக ஆட்சி வந்தது.

ஆக, கூட்டிக்கழித்துப் பார்த்தால் என்ன தெரிகிறது? ஆட்சி முறைகள் என்னவாக இருந்தாலும் அரசு என்பது நீதி, நிர்வாகம் போலீஸ், ஜெயில், ராணுவம் இம்மூன்றும் சேர்ந்ததுதான் அரசு. நீதி என்பது வேறு. அது எல்லோருக்கும் பொதுவானது என்று மக்கள் தவறான ஒரு கருத்தை வைத்துள்ளனர். அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும் நீதியும் அரசின் ஒரு பகுதிதான் என்பது.

அப்படியாகப்பட்ட அரசு எப்போது பிறந்தது? அதன் கதை என்ன? ஆனால், கதையைச் சொல்லவிடாமல் இன்னொரு கேள்வி வந்து வழி மறிக்கிறது. இதுவரை மேலே சொல்லப்பட்ட ஆட்சி முறைகள் அத்தனையும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். சட்டையை மாற்றி மாற்றிப் போடுவதால் மக்களுக்கு அது வேறு இது வேறு போலத்தோற்றம் காட்டலாம். ஆனால் எல்லா ஆட்சிகளுமே தனியார் சொத்துக்களைப் பாதுகாக்கிற ஒரே வேலையைத்தான் காலம் காலமாகச் செய்து கொண்டிருக்கின்றன. மேலே சொன்ன எல்லாமே தனியுடைமையைப் பாதுகாக்கும் ஆட்சிகள்தான். இவை எல்லாவற்றிலும் இருந்து வேறுபட்டது சோசலிச ஆட்சி அல்லது பொதுவுடைமை ஆட்சி ஒன்றுமட்டும்தான். அதைப்பற்றி இதுவரை ஒன்றுமே சொல்லவில்லையே ஏன்? என்கிற கேள்வி இப்போது நம்முன் நிற்கிறது.

Scanned by CamScanner




# 3

# இடதும் வலதும்

ஜெர்மன் நாடு உலகுக்கு அளித்த மேதை கார்ல் மார்க்ஸ் 1848ஆம் ஆண்டு "கம்யூனிஸ்ட் அறிக்கை" என்றொரு புத்தகத்தை அவருடைய நண்பர் எங்கல்ஸ்சுடன் சேர்ந்து வெளியிட்டார். அப்புத்தகம் அரசியல் பற்றி அதுவரை இருந்த கருத்துக்கள், எண்ணங்கள், அர்த்தங்கள் அத்தனையையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட்டது. அதுவரை ஆட்சி - அரசு - அரசாங்கம் என்று பேசி வந்தது எல்லாம் தப்பு என்பது உலகத்துக்குப் புரிந்து விட்டது. மக்கள் என்று பொதுப்படையாகப் பேசுவது தப்பு. தொழிலாளிகளும் விவசாயிகளும் ஆகிய பாட்டாளி வர்க்கம் என்பது வேறு; இந்தப் பாட்டாளிகளின் உழைப்பினால் சுகமாக வாழும் முதலாளி வர்க்கம் என்பது வேறு என்பதை கார்ல் மார்க்ஸ் உலகத்துக்குப் புரியவைத்து விட்டார்.

அன்று முதல் உலகத்தில் ரெண்டே ரெண்டு அரசியல்தான் உண்டு என்பது தெளிவாகிவிட்டது.

**ஒன்று : இடதுசாரி அரசியல்**

**இரண்டு : வலதுசாரி அரசியல்**

நாட்டின் சொத்துக்கள் எல்லாம் பொது உடமையாக இருக்க வேண்டும். சமூகத்தின் கையில் இருக்க வேண்டும் என்று சொல்வது இடதுசாரி அரசியல். பாட்டாளிகளின் ஆட்சி இது. சோசலிச அரசு இது. சோசலிசம் என்றால் சமூக உடைமை என்று பொருள். சொத்துக்கள் எல்லாம் முதலாளிகளிடமே இருக்க வேண்டும் என்று சொல்வது வலதுசாரி அரசியல். இது தனியுடமை ஆட்சி. சொத்துக்கள் யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சொல்வதும் இதே அர்த்தம்தான். வலதுதான்.

அரசியல் என்றாலே ஒரு சமூகத்தின் சொத்துக்கள் அதாவது பொருளாதாரம் யார் கையில் இருக்கவேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம்தான். இப்படி இரண்டே இரண்டு அரசியல்தான் என்று முடிவாகி விட்டால் பிறகு கட்சிகளும் ரெண்டுதானே இருக்க வேண்டும். ஒன்று பொதுவுடைமைக் கட்சி. இன்னொன்று தனியுடைமைக் கட்சி. அவ்வளவுதானே. பின் ஏன் இத்தனை கட்சிகள்?

Scanned by CamScanner

இப்படி அப்பாவியாக தொழிலாளிகளாகிய நாம் கேள்வி கேட்பது சரி. ஆனால் முதலாளிகள் நம்மைப்போல அப்பாவிகள் இல்லையே. வெளிப்படையாக முதலாளி கட்சி அல்லது தனியுடைமைக் கட்சி என்று பெயர் வைத்தால் மக்கள் ஆதரவு கிடைக்குமா? ஆகவே பலப்பலவிதமான பெயர்களில் கட்சிகள் வைத்து அரசியல் செய்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தார் கார்ல் மார்க்ஸ். இத்தனை பெயர்களில் இத்தனை நூறு கட்சிகள் இருந்து என்ன செய்ய? உண்மையிலேயே தொழிலாளிகளுக்காகப் பாடுபட ஒரு கட்சி கூட இல்லையே என்று மனம் வருந்தினார். தான் எழுதியது வெறும் புத்தகமாக நின்று போய்விடக்கூடாது என்று தீர்மானித்தார்.

அவரே முன்நின்று கம்யூனிஸ்ட் கட்சியைத் தொடங்கினார். கம்யூனிஸ்ட் என்றால் பொதுவுடைமை என்று அர்த்தம். இப்படி வெளிப்படையாக பொதுவுடைமைக் கட்சி என்று பெயர் வைத்து அவர் ஆரம்பித்ததும் ஐரோப்பாக்கண்டம் முழுவதும் தீப்பிடித்துக் கொண்டது. தொழிலாளிகள் விழித்துக்கொண்டார்கள். ஆகா. . . நாம இத்தனை நாளா முட்டாளா இருந்துட்டமே என்று புரிந்து விட்டது.

அதைத்தொடர்ந்து முதலாளிகள் எப்படி முதலாளிகள் ஆனார்கள் என்கிற கதையை கார்ல் மார்க்ஸ் புள்ளி விவரத்தோடு "மூலதனம்" (Das Capital) என்ற புத்தகத்தில் விலாவாரியாக எழுதி விட்டார்.

அதைப்படித்த தொழிலாளர்கள் மூலதனம் என்பது எப்படி வந்தது? லாபம் என்றால் என்ன? என்பதையெல்லாம் புரிந்து கொண்டார்கள். லாபத்தின் சூட்சுமம் வேலை நேரத்தில்தான் அடங்கி இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டனர். எட்டுமணி நேரம்தான் வேலை செய்வோம் என்று முதலாளிகளுடன் தகராறு செய்யத்தொடங்கினர்.

அப்போதெல்லாம் தொழிலாளிகள் ஒரு நாளைக்கு 20 மணி நேரம்கூட வேலை செய்துவந்தனர். முதலாளி கொடுக்கிற சம்பளத் துக்கு நாலுமணி நேரம் வேலை செய்தால் போதுமானது. ஆனால், தொழிலாளி குறைந்தது எட்டு மணி நேரமாவது வேலை செய்கிறான். நாலு மணி நேரம் போக மிச்சம் தொழிலாளி வேலை செய்யும் நேரத் தில் உருவாகும் பொருள்தான் லாபம் என்ற பெயரில் முதலாளிக்குக் கிடைக்கிறது. இதைத்தான் மார்க்ஸ் உபரி உழைப்பு என்றார். பக்கம் பக்கமாக கணக்கு வழக்கெல்லாம் போட்டு மூலதனம், லாபம் என்பதெல்லாம் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்ற முதலாளி வர்க்கம் காலம் காலமாகச் செய்துவரும் ஏமாற்று என்பதை கார்ல் மார்க்ஸ் தெள்ளத் தெளிவாக எழுதிவிட்டார்.

அதன் பிறகு அரசியல் என்பது முதலாளிக்கும் தொழிலாளிக்கு மான பிரச்னையாக மாறிவிட்டது. கட்சி அரசியல் எல்லாம் பின்னுக்குப் போய்விட்டது. கார்ல் மார்க்ஸ் சொன்னதை எல்லாம்

Scanned by CamScanner

தொழிலாளிகள் பூரணமாக புரிந்து கொண்டார்களோ இல்லையோ. எட்டு மணி நேரம்தான் உழைக்க முடியும் என்ற குரல் ஒவ்வொரு நாட்டிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது. அதன் உச்ச கட்டம்தான் அமெரிக்க நாட்டில் 1886ஆம் ஆண்டு நடைபெற்ற தொழிலாளர் போராட்டமும் மேதினம் உருவான கதையும்.

அதெல்லாம் சரி, இன்னொரு கேள்வி பாக்கி இருக்கிறதே? இந்த அரசியலுக்கு இடது - வலது என்று எப்படிப் பேர் வந்தது? அது பெரிய கதை. உண்மையில் எப்படி நடந்ததோ தெரியாது. ஆனால் கேள்விப்பட்ட வரை இதுதான் கதை:

இங்கிலாந்து நாட்டில் ஒரு ராஜா ஆட்சி செய்து வந்தாராம். மன்னராட்சி என்றால் அரச சபை என்று ஒன்று இருக்குமல்லவா? அரசருக்கு ரெண்டு கைப்பக்கமும் மந்திரிகள், சேனாதிபதி, பிரபுக்கள், ராஜரிஷி, முதலாளிமார்கள் எல்லோரும் உட்கார்ந்திருப்பார்கள். அந்த அரசசபைதான் நாட்டுமக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும், யார் யார் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பது உட்பட சகலத்தையும் தீர்மானிக்கும். நீதி, நிர்வாகம், ராணுவம், சிறைச்சாலை அத்தனைக்கும் பொறுப்பு இந்த அரசசபைதான். ஆனால் இந்த சபையில் தொழிலாளிகள், விவசாயிகள் உழைப்பாளி களுக்கு இடம் கிடையாது.

இப்படிக் கதை போய்க்கொண்டிருக்கையில் அந்த நாட்டுத் தொழிலாளர்கள் பெரிய போராட்டம் நடத்தினார்கள். அரசியல் உரிமை வேண்டும், நல்ல வாழ்க்கை வேண்டும் என்று பெரிய கலகம் வெடித்தது. ராஜா அரண்மனையை விட்டு வெளியே வரமுடிய வில்லை. வேற வழியே இல்லை. சரி. தொழிலாளிகளும் இனிமேல் அரசசபையில் பங்கேற்கலாம் என்று உத்தரவு போட்டுவிட்டார். உடனே பிரபுக்கள், மந்திரி சேனாதிபதிகளெல்லாம் எழுந்துநின்று "ராஜா. . . . ராஜா. . . ஒரு சின்ன விண்ணப்பம். நாங்களெல்லாம் இந்தப் பஞ்சை பராரிகளுடன் எங்கள் நிலைமையைக் கொஞ்சம் யோசித் துப் பாருங்கள் மகாராஜா. . ." என்று பவ்வியமாக வேண்டி நின்றனர். ராஜாவும் யோசித்தார். ஓ. . . இப்படியும் ஒரு பிரச்னை இருக்கே. . . சரி. . நீங்களெல்லாம் எனக்கு வலதுகைப் பக்கம் இருங்கள். தொழிலாளிகள் அப்படி எனது பீச்சாங்கைப் பக்கமாக இருந்துவிட்டுப் போகட்டும். சரிதானே? என்று உத்தரவு போட்டு விட்டாராம்.

அன்று முதல் வலது என்றால் முதலாளிகள், பண்ணையார்கள், பிரபுக்கள் - இடது என்றால் பாட்டாளிகள் என்று பழக்கத்துக்கு வந்துவிட்டது. காலப்போக்கில் யாரெல்லாம் தொழிலாளி, விவசாயி களுக்காகக் குரல் கொடுக்கிறார்களோ அவர்களெல்லாம் இடது சாரிகள் என்றும் முதலாளிகளுக்காகப் பேசுகிறவர்கள் வலது சாரிகள் என்றும் அரசியல் உலகில் பேர் ஆகிவிட்டது.

Scanned by CamScanner

இந்த அடிப்படையில் நாட்டில் உள்ள கட்சிகள் அத்தனை யையும் வலதுசாரிக் கட்சிகள், இடதுசாரிக் கட்சிகள் என்று ரெண்டாகப் பிரித்துவிடலாம். சில கட்சிகள் நாங்க ரெண்டும் கிடையாது நடு என்று சொன்னால் அது ரீல். தனியுடைமையா? பொதுவுடைமையா? ரெண்டும் சரிதான் என்று யாராவது சொன்னால் நடைமுறையில் அவர் வலதுசாரியாகத்தான் இருப்பார். (இதுபற்றி இன்னும் விளக்க மாக பின்னால் பார்ப்போம்).

1947ல் இந்தியா சுதந்திரம் பெற்றபோது நாலே நாலு கட்சிகள்தான் இருந்தன. ரெண்டு இடதுசாரிக் கட்சிகள். ரெண்டு வலதுசாரி கட்சிகள்.

| | |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ்<br>இந்திய யூனியன் முஸ்லிம் லீக் | தனியுடைமை இருக்கட்டும்<br>என்று சொன்ன வலதுசாரி. |
| இந்திய கம்யூனிஸ்ட் கட்சி<br>சோஷலிஸ்ட் கட்சி | பொதுவுடமை வேண்டும்<br>என்று சொன்ன இடதுசாரிகள். |

ஆனால் இன்று இந்தியாவில் நிலைமை என்ன? 600-க்கு மேற்பட்ட கட்சிகள் நம் நாட்டில் இருக்கின்றன. அவற்றில் இடதுசாரி கட்சிகள் நாலோ ஐந்தோதான். இப்படி நூற்றுக்கணக்கான கட்சிகள் இருப்பதால் தொழிலாளிகளுக்கும், பிற உழைப்பாளி மக்களுக்கும் எது உண்மையிலேயே நம்ம கட்சி என்று கண்டு பிடிக்கத் தெரியா மல் எல்லாக் கட்சியிலேயும் சேர்ந்து ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். அல்லது ஒரு கட்சியும் வேண்டாம் எல்லாமே சாக்கடை என்று ஒதுங்கி நிற்கிறார்கள்.

அரசியல் என்பதன் அடிப்படையை - அரசு என்பது பிறந்து வளர்ந்த கதையை - எல்லோரும் தெரிந்துகொண்டால்தான் ஏமாற்றங் களிலிருந்து விடுபடமுடியும். விரக்தியில்லாமல் நமக்கான அரசியலைப் புரிந்துகொள்ளமுடியும்.




Scanned by CamScanner

# அரசு பிறந்த கதை

அரசு என்கிற இந்த ஏற்பாடு (நீதி,நிர்வாகம்,ராணுவம்,போலீஸ்- என்கிற இந்த ஏற்பாடு) எப்போது தோன்றியது? ஏன் தோன்றியது? என்று பார்ப்பதுதான் இப்போதைக்கு நம்முடைய தேவை.

வரலாற்றில் இரண்டு வகை உண்டு. ஒன்று எழுதப்பட்ட வரலாறு. இன்னொன்று எழுத்து கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாக நடந்த வரலாறு. அது எழுதப்படாத வரலாறு எனப்படும். எழுதப் பட்ட வரலாறு நமக்கு சில ஆயிரம் ஆண்டுகளுக்கு மட்டும்தான் இருக்கிறது. சில கல்வெட்டுகள், மலைக்குகைகளில் வரையப்பட்ட ஓவியங்கள் இவற்றை வைத்து கொண்டு மேலும் சில ஆண்டுகளுக்கு முன் பூமியில் நடந்தவற்றைச் சொல்ல முடிகிறது. எழுதப்பட்ட வரலாறு களில் எல்லாம் அரசு பற்றிய குறிப்புகள் இருந்து வந்திருப்பதால் எப்போதுமே அரசு இருந்துவந்ததாக ஒரு கருத்து நம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மனிதன் இப்பூமியில் தோன்றி லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகிவிட்டனவே. எழுதப் பட்ட வரலாறு ஒரு 5000 வருசத்துக்கு உட்பட்டுத்தானே இருக்கிறது.

மனிதன் முதன் முதலில் தோன்றியது ஆப்பிரிக்கக் கண்டத்தில் தான் என்று இப்போது விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டு விட்டது. அங்கிருந்து கால்நடையாகப் புறப்பட்ட மனிதன் உலகம் முழுவதும் பரவினான். தன் பிறந்த பூமியான ஆப்பிரிக்காக் கண்டத்தில் அவன் இருந்தபோது அங்கே அரசு கிடையாது.

குரங்குகளில் ஒரு பிரிவுபோல அங்கே வாழ்ந்து பிறகு முன்னங் கால்களைத் தூக்கி நட்டமாக நடக்கத் துவங்கிய பிறகுதான் மனித னானான். கூட்டம் கூட்டமாக நடக்கத் தொடங்கிய மனிதன் சாப்பிட கறியும் கிழங்கும் பழமும், குடிக்கத்தண்ணீரும் கண்ட இடங்களிலெல்லாம் தங்கி வாழ ஆரம்பித்தான். அதை ஆதிகால இனக்குழுக்கள் என்கிறோம். கூட்டாக இரைதேடி கூட்டாக வேட்டையாடி கூட்டாக பகிர்ந்து உண்டு வாழ்ந்த அப்போதும் அரசு என்று எது வும் கிடையாது. தேவைப்பட வும் இல்லை.



"அனைவருக்கும் வாக்குரிமை" – சாசன இயக்கம் [illegible]

Scanned by CamScanner

அன்றைய காலத்தில் வேட்டையாடிய மிருகங்கள் மற்றும் தேடிக்கொண்டு வந்த பழங்கள், கிழங்குகள் பூராத்தையும் ஒரே நாளில் தின்று முடிக்கவும் முடியாது. அதை மறுநாளைக்கு வச்சிக்கிடலாம் என்று பாதுகாக்கவும் வழி தெரியாது. ஆகவே கிடைத்ததை எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர். வேறு வழி இல்லை. அந்தக் கட்டத்தில் அரசு தோன்றியிருக்கவில்லை. தனியாக எந்த மனிதனுக்கும் அப்போது சொத்து என்று எதுவும் இல்லை. எல்லாமே பொதுச் சொத்துத்தான். யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எடுத்து சாப்பிடலாம். பயன்படுத்தலாம். காற்று போல தண்ணீரைப் போல ஆகாயத்தைப் போல பூமியும் அதிலுள்ள அத்தனையும் அப்போது எல்லோருக்கும் பொதுவாகத் தானே இருந்தது. அதுதான் ஆதிகால பொதுவுடைமை சமூகம்.

அடுத்தகட்டமாக மனிதன் மிருகங்களை வளர்க்க ஆரம்பித்தான். அது மேய்ச்சல் காலத்தின் தொடக்கம். மேய்ச்சல் காலத்தில் நிறைய மிருகங்களை மனிதன் பழக்கினான். அந்த மிருகங்களும் அவற்றை மேய்க்கப் பயன்படுத்திய கருவிகளும்தான் மனித வாழ்க்கையின் முதல் சொத்துக்களாகின.

ஆரம்பத்தில் ஆண்களும் பெண்களும் சேர்ந்துதான் வேட்டைக் குப் போனார்கள். பிரசவம் போன்ற காரணங்களால் வேட்டைக்குப் போகமுடியாத பெண்கள் குகைகளில் தங்கி இருந்தபோது மரம் செடி கொடிகளை உன்னிப்பாகக் கவனித்து அவை வளரும் விதத்தை அறிந்தனர். அதேபோல தாங்களும் பயிரிட்டு வளர்க்க முடியும். பகல் பூராவும் மிருகங்களோடு சண்டை போட்டுக்கொண்டு இரை தேடி நாயாக அலைய வேண்டியதில்லை. நாம் இருக்குமிடத்திலேயே எல்லாத்தையும் உண்டாக்க முடியும் என்பதை பெண்கள் கண்டு பிடித்தனர். விவசாயம் வளரத்துவங்கியது. சொத்தும் பெருக லாயிற்று.

சொத்து வந்தாலே தகராறுதானே? என்று சொல்லுவார்கள். ஆனால் உண்மை அதுவா? சொத்து என்பது இயற்கையில் எப்போதும் இருந்து கொண்டேதானே இருக்கிறது. இது என் சொத்து என்கிற “தனிச்சொத்து ” என்பது மனிதகுல வரலாற்றில் எப்போது வந்ததோ அப்போதுதான் பிரச்சினை ஆரம்பமாயிற்று. பொதுச்சொத்தால் பிரச்சினை இல்லை. தனிச்சொத்துதான் பிரச்சினை. தங்களுடைய சொத்தைப் பாதுகாப்பதற்காக சொத்துக் காரர்கள் அடியாட்களை வைத்துக் கொண்டார்கள். சொத்து என்ன பெரிய சொத்து. அன்னக்கித் தேதியில் கொஞ்சம் ஆடு மாடுகளும் ஆடு மேய்க்கிற கம்புகளும் தொரட்டிகளும் கொஞ்சம் தானியம் தவசமும்தான் இருந்திருக்கும். பிறகு தனிச்சொத்து மேலும் பெருகப் பெருக அடியாட்களின் எண்ணிக்கையும் பெருகியது.

Scanned by CamScanner

இப்படி "தனிச்சொத்து" என்று ஒன்று அதற்கு முன் கிடையாது. ஆரம்பத்தில் எல்லாமே வாலி பாடியதுபோல "கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காகக் கொடுத்தான். ஒருத்தருக்கா கொடுத்தான் இல்லை ஊருக்காகப் கொடுத்தான்" என்கிறபடிதான் இருந்தது. எல்லாத்தையுமே பொதுவுடைமை யாகத்தான் இயற்கை படைத்தது. வலுத்தவன் இது என் சொத்து" என்று வளைத்துப் போட்டுக்கொண்டு தனியுடைமையை இயற்கைக்கு விரோதமாக உருவாக்கினான். எல்லாம் பொதுவாக இருந்தபோது யார் வேண்டு மானாலும் எந்த மரத்திலும் எந்தப் பழத்தையும் பிடுங்கி சாப்பிட லாம். ஆனால் இப்போதோ பசிக்கிதே என்று ஒரு பழத்தைத் தொட்டால் அடியாள் வந்து அடித்து இழுத்துப்போகிறான். தண்டனை தருகிறான்.

இப்படியே நாள் போகப்போக காடுகரையெல்லாம் ஒருசிலர் வளைத்துப்போட மற்றவர்கள் அதில் உழைத்து வாட என்கிற நிலை உருவானது. அது உடைமை வர்க்கம். இது உழைக்கும் வர்க்கம். வர்க்கம் என்றால் ஒரே நிலையில் உள்ளவர்களின் கூட்டம் என்று அர்த்தம். இவர்கள் உழைத்தால்தான் அவனுக்குச் சொத்து சேரும். அவனுக்குச் சொத்து சேரச்சேர இவர்கள் தேய்ந்து கட்டெறும்பாக வேண்டும்.

இரண்டும் நேர் எதிரான இரண்டு வர்க்கங்களாக வளர்ந்தன. மோதல்களும் அடிக்கடி நடக்காமலா இருக்கும்? உடைமை வர்க்கம் என்பது கொஞ்சப் பேர்தான். உழைக்கும் வர்க்கம்தான் பெரும்பகுதி. இரண்டுக்குமிடையிலான மோதல் வலுத்தது. ஒன்றின் அழிவில்தான் இன்னொரு வர்க்கம் வளரமுடியும் என்கிற நிலைமை வந்தது. அப்போது 'சரி சரி நமக்குள்ளே சண்டை வேண்டாம். எது நியாயமோ- எது நீதியோ- எது சட்டமோ அதை ரெண்டுபேரும் ஒத்துக்கொள்வோம்' என்றது உடைமை வர்க்கம். அவரவர் சொத்து அவரவருக்கு அடுத்தவன் சொத்துக்கு ஆசைப்பட்டால் ஜெயில். இதுதான் சட்டம், நீதி சரியா.. என்றது.

ஆதிகாலத்தில் இயற்கையோடு போராடியபோது மனிதர்கள் எல்லோரும் ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். தனிச்சொத்துக்காரர்கள் அரசு என்பதை உருவாக்கியபோது முதலில் செய்த காரியம் மக்களிடமிருந்து ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததுதான். ராணுவம், போலீஸ் என்று ஆயுதங்களை வைத்திருக்கும் தனிவகை அமைப்பு களை உருவாக்கி விட்டது. நிராயுதபாணிகளாக உழைப்பாளிகளை வைத்துக்கொண்டு அவர்கள்மீது அதிகாரம் செலுத்துகிறது அரசு. அதனால்தான் அரசு என்பது 'ஒரு ஒழுங்கு செய்யப்பட்ட வன்முறைக் கருவி' என்றார் லெனின்.

இப்படியாக தனிச்சொத்து என்று ஒன்று இந்த பூமியில் வந்த பிறகுதான் அதைப் பாதுகாப்பதற்காக நீதி, நிர்வாகம் ராணுவம்

Scanned by CamScanner

போலீஸ் ஜெயில் என்று எல்லா இழவும் வந்தது. இம்மூன்றும் சேர்ந்ததுதான் வன்முறைக்கருவி.

"வர்க்கப்பகைமைகள் இணக்கம் காணமுடியாதவை ஆனதன் விளைவாய்த் தோன்றியதே அரசு" என்றார் லெனின்.

சொத்துக்காரன் ஆரம்பகாலத்தில் உண்டாக்கிவைத்த அடியாள்தான் பிற்காலத்தில் ரத கஜ துரோக பதாதிகள் என்றானது. அதற்கும் பிற்காலத்தில் ராணுவம் போலீஸ் என்று சீருடைமாட்டி நின்றது. லெனின் மேலும் கூர்மையாகச் சொன்னார்:

"ஒரு வர்க்கம் பிறிதொன்றை ஒடுக்குவதற்கான உறுப்பே அரசு. . . . அரசு எனப்படும் சக்தி சமுதாயத்திலிருந்து உதித்தது. ஆனால் சமுதாயத்துக்கு மேலானதாய்த் தன்னை இருத்திக் கொள்கிறது. சமுதாயத்திலிருந்து தன்னை மேலும் மேலும் அயலானாக்கிக் கொள்கிறது. இந்தச் சக்தி பிரதானமாய் எவற்றால் ஆனது? சிறைக் கூடங்களையும் இன்னபிறவற்றையும் தமது ஆதிக்கத்தில் வைத்திருக் கும் ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்ட தனிவகைப் படைகளால் ஆனது."

மனிதன் தோன்றிய காலம் முதலாக இன்றுவரை உலகத்தில் உருவான அரசுகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:



1. ***ஆதி பொதுவுடைமை சமூகம் :*** இதை அரசு என்று கூற முடியாது. ஏனெனில் சொத்து எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறது. மக்கள் இனங்களாக, இனக்குழுக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வர்க்கமும்இல்லை. வர்க்கப் பகைமையும் கிடையாது.

2. ***ஆண்டான்-அடிமை சமூகம் :*** மோதிக் கொண்ட இரண்டு இனக்குழுக்களில் தோற்ற குழு அடிமைஆனது. ரோம், கிரேக்கம் போல இல்லாவிடினும் தமிழகத்திலும் அடிமை முறை இருந்தது. சோழர் காலத்திலும் இருந்தது. "சந்திராதித்தர் உள்ளவரை" "யானும் என் வம்சத்தாரும்" பரம்பரை பரம்பரையாக அடிமையாக இருந்தது பற்றி ஏராளமான சோழர் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

3. ***நில உடைமை அரசு :*** நாந்தான் ராஜா, இந்த நாடு பூரா எனக்கே சொந்தம் என்று ஒருத்தன் சொல்லி படை பலத்தால் மக்களை நேரடியாக ஒடுக்குவது. நீதி, நிர்வாகம், ராணுவம், போலீஸ்

Scanned by CamScanner

எல்லாமே அவன் கையில்தான். விவசாயம்தான் அடிப்படைத் தொழில்.

4. **முதலாளித்துவ அரசுகள் :** இப்போது உலகம் பூராவும் இருப்பது இதுதான். இதில் நேரடியாக முதலாளி நம் கண்ணுக்குத் தெரியமாட்டான். அது மக்களாட்சியாக இருக்கலாம் (இந்தியாவைப் போல), ராணுவ ஆட்சியாக இருக்கலாம் (பாகிஸ்தானைப் போல), பாசிச ஆட்சியாக இருக்கலாம். (ஹிட்லரின் ஜெர்மனியைப் போல), ரொம்ப புத்திசாலித்தனமான அரசு இதுதான். ஏனெனில் உண்மையான ராஜாவான முதலாளிகள் பின்னணியில் திரை மறைவில் இருக்க அரசு என்பது எல்லோருக்கும் பொதுவானது போல படம் காட்டிக் கொண்டு நீதி, நிர்வாகம், ராணுவம் போலீஸ் எல்லாம் முதலாளிகளுக்கு நேரடிச் சம்பந்தமே இல்லாதது போல மக்கள் நம்பும் விதமாக இருக்கிறது.

5. **சோஷலிச அரசு :** இதற்கு முன்பு இருந்ததெல்லாம் கொஞ்சப் பேரான உடைமை வர்க்கத்துக்காக பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கத்தை ஒடுக்கும் அரசுகள். சோஷலிச அரசுதான் உலக வரலாற்றில் முதன் முறையாக பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் நலன்களைக் காப்பதற்காக உருவான அரசு. 1917 முதல் 70 ஆண்டுகாலம் சோவியத் நாட்டில் இருந்தது. இப்போது மக்கள்சீனம், கியூபா, வியட்நாம், வடகொரியா போன்ற நாடுகளில் இருப்பது.

சரி. இது பொதுவாக உலக அளவில் அரசுகள் தோன்றி வளர்ந்த கதையாக இருக்கிறது. அரசு என்பதே தனிச்சொத்து உடைமையாளர்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு "சட்டபூர்வ மான"(!) வன்முறை ஏற்பாடு என்பது பொதுவாகப் புரிகிறது. சொத்து ஆதிகாலத்தில் தன்னைக் காத்துக்கொள்வதற்காக ஏற்படுத்திய அடியாள் மற்றும் கூலிப்படைதான் பிற்காலத்தில் போலீஸ், ராணுவம், சிறை என்றானது. நாகரிகம் வளர வளர வெறும் அடியாள் மட்டும் வைத்து பெருவாரி மக்களை கட்டுப்படுத்த முடியாது என்பதைப் புரிந்துகொண்ட தனிச் சொத்து (இப்போது அதன் பெயர் மூலதனம்) நீதி, சட்டம், பரம்பரைச் சொத்து அப்படி இப்படி என்று கண்ட கண்ட விசயங்களையும் மக்கள் மண்டையில் ஏத்தி தனிச் சொத்து இருப்பதும் நியாயம் அதைப் பாதுகாக்க அரசு இருப்பதும் நியாயம், தேவை என்று மனப்பூர்வமாக மக்களை நம்பவைத்து விட்டது.

இப்படியாகப் பிறந்த அரசு நம்ம தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த கதை நாம் அவசியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

Scanned by CamScanner

# தமிழக அரசு

ஒண்ணரை லட்சம் வருடங்களுக்கு முன்னாள் ஆப்பிரிக்காக் கண்டத்தை விட்டுக் கால்நடையாகப் புறப்பட்ட நம் முப்பாட்டிகளும் முப்பாட்டன்களும் பல திசைகளுக்கும் பரவிச் சென்றது போல நடந்து நடந்தே தமிழ்நாட்டுக்கும் வந்துசேர்ந்தனர். ஒரே நடையாக ஆப்பிரிக்காவில் பிடித்த நடையைத் தமிழ்நாட்டில் வந்துதான் நிறுத்தியதாக நினைக்கவேண்டாம். வழி நெடுக அங்க பத்து வருசம் இங்க முப்பது வருசம் அங்கன ஒரு நூறு வருசம் இங்கனஒரு ஆயிரம் வருசம் என்று தங்கித் தங்கித்தான் வந்து சேர்ந்தார்கள். அப்போது இங்கே மனிதர்கள் யாரும் கிடையாது. பறவைகளும், சில மிருகங்களும் மட்டும்தான் கூப்பாடு போட்டுக் கொண்டு கிடந்தன.

வந்தவர்கள் தண்ணியும் இரையும் கிடைத்த இடங்களில் ஆங்காங்கே சின்னச் சின்ன குழுக்களாகத் தங்கிவிட்டார்கள். 'இனக்குழுக்கள்' என்று அக்குழுக்களைக் கூறுவார்கள். மலையும் மலை சார்ந்த இடமுமானகுறிஞ்சி நிலப்பகுதியில்தான் முதலில் 'செட்டில்' ஆனார்கள். அங்குதான் வேட்டையாட. விலங்குகளும் இருந்தன. சாப்பிட காய்கறிகளும் தேனும் தினையும் குடிக்கத் தண்ணீரும் வளமாகக் கிடைத்தன. அப்போது அங்கே அரசு இல்லை. பொதுவுடைமைதான்.

இனக்குழு வாழ்க்கையில் அரசு தேவைப்படவில்லை. மலை சார்ந்த குறிஞ்சியில் மட்டுமல்லாது காடும் காடு சார்ந்த இடமுமான முல்லை நிலப்பகுதியிலும் இனக்குழுக்கள் வாழ்ந்தன. நாம் ஏற்கனவே சொன்னபடி பெண்கள் விவசாயத்தைக் கண்டுபிடித்த பிறகு வளர்ச்சியின் வேகம் கூடியது. வயலும் வயல் சார்ந்த இடமும் அதிகரித்தது. அதற்கு மருதநிலம் என்று பெயர். அது அனேகமாக நதிகளை ஒட்டியே இருந்தது. மருதநிலத்தில் தனிச்சொத்து குவியத் துவங்கியது. தனிச்சொத்து வந்தால் கூடவே அடியாட்களும் அதைத் தொடர்ந்து அரசும் வந்தாகவேண்டுமே. மருத நிலமெங்கும் முதலில் சிறு சிறு அரசுகள் தோன்றின. காவிரி, வைகை, தாமிரபரணி, பெண்ணை, பாலாறு போன்ற நதிக்கரைகளில் சிற்றரசுகள் பல தோன்றின.

சிற்றரசு என்ன சிற்றரசு! விவசாயம் செய்யும் நிலப்பரப்பு கொஞ்சமாக இருந்து அடியாட்கள் கூட்டமும் சின்னதாக இருந்தால்

Scanned by CamScanner

சிற்றரசு. அடியாட்கள் படை பெருங்கூட்டமாக இருந்தால் பேரரசு அவ்வளவுதான்.

நதிகளைத் திருப்பி சமவெளிகளில் வயல்களை உருவாக்குவதற்கு ஏராளமான ஆள்பலம் வேண்டும். எனவே மருதநிலத்தில் தோன்றிய அரசுகள் குறிஞ்சியிலும் முல்லையிலும் "சிவனேன்னு" வேட்டையாடிப் பிழைத்துக் கொண்டிருந்த இனக்குழுக்களை வம்படியாக அடித்துப் பத்திக்கொண்டு வந்து மருதநிலத்தில் குடியேற்றி "பண்டு விளைந்தறியாக் களர் நிலங்களை" சாகுபடி நிலங்களாக மாற்றக் கடுமையாக உழைக்கச்செய்தனர். கட்டாய உழைப்புத்தான். காவிரிக்கரையில் கரிகாலன் கட்டிய கல்லணைதான் முதன் முதலாக மிகப்பெரிய அளவிலான விவசாயத்தை சாத்தியப் படுத்தியது. அதற்கு ஏற்றாற்போன்ற ஆள்பலத்தையும் அரசையும் தோற்றுவித்தது. அப்போதும் இன்றைய தமிழகம் முழுவதையும் அடக்கிய ஒரு தமிழக அரசு உருவாகி விடவில்லை.

அதியர், ஆவியர், ஆதன், இளையர், உதியர், எவ்வி, ஒளியர், கவுரியர்,கழாஅர், கிள்ளி, கொங்கர், சென்னி, செழியன், பழவர், பழையர், பஞ்சவர், புலியர், வழுதியர், வில்லோர், மறவர் எனப் பல நூறு தமிழ் இனக்குழுக்கள் அழிக்கப்பட்டு சிற்றரசுகளும் சிற்றரசுகளை அழித்தும் உட்கொண்டும் பேரரசுகளும் தமிழ் மண்ணில் தோன்றின.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தே இனக்குழுக்கள் "அழிப்பு" துவங்கி விட்டது. கி. மு. இரண்டு முதல் கி. பி. இரண்டுக்குள் இனக்குழுக்கள் அழிந்து சிற்றரசுகளும் சிற்றரசுகள் இணைக்கப்பட்டு சேர,சோழ,பாண்டிய என்று மூன்று முடியரசுகளும் தோன்றிவிட்டன. முடியரசு என்றதும் ஏதோ பெரிய சாம்ராஜ்ஜியம் என்று நினைத்து விட வேண்டாம். ரெண்டு மூணு மாவட்டங்கள் சேர்ந்தால் என்ன சைஸ் இருக்குமோ அதுதான் ஒரு முடியரசு

தமிழ்நாடு என்ற நினைப்பே அப்போது யாருக்கும் வந்திருக்கவில்லை. நாங்க பாண்டிய நாட்டார், நீங்க சேர நாடு என்கிற அளவில்தான் சிந்தனை இருந்தது. அதற்கு அடுத்த காலகட்டத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில்தான் முதன்முறையாக "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை. ." அதாவது இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு ஒரே நிலம் என்று இளங்கோவடிகளால் கூறப்படுகிறது.

கி. பி. 6-9 காலப்பகுதியில்தான் தமிழ்பேசும் நிலப்பரப்பில் கொஞ்சம் பெரிய அரசுகள் தோன்றின. வடதமிழகத்தில் பல்லவ அரசும் தென் தமிழகத்தில் பாண்டி நாடும் எழுந்தன. எனினும் தமிழகம் முழுவதையும் ஆண்ட அரசு உருவானது கி.பி. 9ஆம் நூற்றாண்டில்தான். அது சோழப்பேரரசுதான். கி. பி. 846-ல் பல்லவ அரசின் கீழ் சிற்றரசனாக இருந்த விஜயாலயன் தனி அரசை

Scanned by CamScanner

நிறுவினான். அவனது வாரிசுகள் தொண்டைமண்டலத்தையும் பாண்டிய நாட்டையும் தோற்கடித்துக் கைப்பற்றினார்கள்.

அதற்குப்பின் ராஜராஜசோழனும் ராஜேந்திரசோழனும் பெரும் விஸ்தரிப்புப் போர்களில் ஈடுபட்டனர். தமிழகம் தாண்டிய நிலப்பரப்புகளையும் கைப்பற்றி சோழப்பேரரசை நிறுவினர். அவர்களுக்குப்பிறகு குலோத்துங்கசோழன் ஆட்சிக்காலத்தில்தான் சோழப்பேரரசு அதிக நிலப்பரப்பைக் கொண்டிருந்தது. மூன்று குலோத்துங்க சோழர்களுக்குப் பிறகு சோழப்பேரரசு வீழத்துவங்கியது.

முத்துக்குளிக்கும் துறைமுகங்களின் மூலமாகவும் அரேபியருடனான வாணிபத்தாலும் பெருகிய வருமானத்தின் பலத்தில் படைகளைப் பெருக்கிக் கொண்டு மாறவர்ம சுந்தர பாண்டியனும் சடையவர்ம சுந்தரபாண்டியனும் நடத்திய இறுதிப்போர்களில் சோழப்பேரரசு சரிந்து விழுந்தது. அப்போது காலம் கி. பி. 1281. நானூறு ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தை ஆண்ட ஒரே அரசு இந்த சோழப்பேரரசுதான்.

அதன் பிறகு கி. பி. 1400-வாக்கில்தான் ஒரு பேரரசு ஏற்படுகிறது. அது வெளியிலிருந்து வந்த அரசு. கர்நாடகம், ஆந்திரா, தமிழகம் முழுவதையும் அடக்கிய விஜயநகரப் பேரரசு. கி. பி. 1700-களின் நடுப்பகுதி வரை நீடித்தது. அந்த நாயக்கர்களின் அரசு தன் ஆட்சிப் பகுதியை 72 பாளையங்களாகப் பிரித்தது. நாயக்கர் ஆட்சியின் சிதைவுக்குப் பின் பாளையக்காரர்கள் தம் இஷ்டம் போல ஆட்சி நடத்தி வருகிறார்கள்.

அப்போது வெள்ளைக்காரன் உள்ளே வருகிறான். சூழ்ச்சிகள் வஞ்சனைகள் செய்தும் ராணுவ பலத்தைக் கொண்டும் ஆட்சியைப் பிடிக்கிறான். காலனி ஆட்சி துவங்குகிறது. 1803-ல் மெட்ராஸ் பிரசிடெண்சி-ஐ வெள்ளைக்காரன் உருவாக்குகிறான். அது தமிழ்நாடு, மற்றும் கேரளத்தின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்தது. வெள்ளையனை விரட்டிய பிறகு 1947-ல் புதிய இந்திய அரசு உருவானது. 1956-ல் மொழிவழி மாகாணங்கள் பிரிக்கப்பட்டபோது தமிழக அரசு இப்போது உள்ள நிலையில் தோன்றியது.

ஸ்டாப். . . . . ஸ்டாப். . . இப்படி ஒரேயடியாக கதையை இழுத்துக் கொண்டு போனால் எப்படி? இந்த அரசுகள் செய்தது என்ன? வலதுசாரியா இடதுசாரியா அது அல்லவா முக்கியம்?. தமிழன் கங்கை கொண்டான்- கடாரம் வென்றான் - கலிங்கத்தை வென்றான் என்று சும்மா கதை சொல்லிக்கொண்டே போனால் உடம்பெல்லாம் புல்லரிக்கிறதே. தொழிலாளிகளாகிய நமக்கு இந்த வெட்டிப் புல்லரிப்புகள் தேவையா? வென்று வென்று வந்த இந்தத் தமிழ் மன்னர்கள் அன்றைய பாட்டாளி வர்க்கமான ஏழை விவசாயக்கூலிகளுக்கு ஆதரவாக இருந்தார்களா? அதைச்சொல்லுங்க முதல்ல.

Scanned by CamScanner




ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பது போலஒன்று பார்ப்போம். சோழப்பேரரசில் குட வோலை முறையில் கிராம சபைகள் தேர்ந்தெடுக்கப் பட்டது பற்றி எல்லோரும் ஆகா ஒகோ என்று பேசு வார்கள். அந்தக்காலத்தி லேயே தமிழன் ஓட்டுப் போட்டு கிராம சபையைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் பார்த்தீர்களா. என்னே சோழர்களின் ஜனநாயக உணர்வு என்று பாராட்டுபவர்கள் நிறைய உண்டு. ஆனால் உண்மை என்ன? யாரெல்லாம் கிராம சபைக்குப் போட்டியிட முடியும் தெரியுமா?

உத்திரமேரூர் என்ற இடத்திலுள்ள சோழர்காலக் கல்வெட்டு இந்தக் குடும்பு என்கிற கிராமசபைக்கு உறுப்பினராகும் தகுதி பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறது:

"கால்வேலி நிலத்துக்கு மேல் இறைநிலம்(அதாவது வரி கட்டும் நிலம்) உடையவனாகவும் தன் சொந்த மனையிலேயே வீடு கட்டிக் கொண்டவனாகவும் முப்பதிலிருந்து அறுபது வயதுக்கு உட்பட்டவ னாகவும் வேத சாஸ்திரங்களில் நிபுணனாகவும் இருப்பவனே கிராமசபையின் உறுப்பினனாக முடியும்."

இக்கல்வெட்டு தகுதி என்ற பெயரில் பெருவாரியான ஏழை உழைப்பாளி மக்களை ஆரம்பத்திலேயே புறந்தள்ளி விடுகிறது. வேத சாஸ்திரங்களை சூத்திரர் படிக்க முடியாது என்பதை நாம் அறிவோம். ஆகவே பிற்பட்ட ,தாழ்த்தப்பட்ட சாதியார் யாரும் சோழர் காலத்து கிராமசபையில் உறுப்பினராகவே முடியாது. ஆகவே பண்டைய தமிழக அரசுகள் வலதுசாரிகளான நில உடமையாளர்களுக்கே ஆதரவாக இருந்தன என்பதற்கு இந்த உதாரணமே போதும். கிராம சபைக்கே போக முடியாத பாட்டாளிகள் அரண்மனை அரசியலைப் பற்றி யோசிக்கவே முடியாது.

அது மட்டுமல்ல எந்த அரசாக இருந்தாலும் அதன் தலையாய வேலை மக்களிடமிருந்து வரி என்ற பேரில் அடித்துப் பிடுங்குவது தான். சோழர்கள் காலத்தில் 400-க்கும் மேற்பட்ட வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. கொடுமையான முறையில் இவ்வரிகள் வசூலிக்கப்பட்டன."**வெண்கலம் எடுத்து மண் கலம் உடைத்து**" வரி வசூலித்ததாக சோழர்காலக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதாவது விலைபோகக்கூடிய பொருட்களை எடுத்துச்செல்வது. விலை போகாத மண்பானை போன்ற பொருட்களை அம்மக்கள்

Scanned by CamScanner

பயன்படுத்த முடியாதபடிக்கி உடைத்து நொறுக்கிப் போட்டு விடுவது. அரசன் அன்று கொல்லும் என்னும் பழமொழிக்கு இதுதான் அர்த்தம் போலும். ஆண்ட சோழனும் தமிழன். மண் சட்டியும் இழந்த வரிகட்ட முடியாத மனிதனும் தமிழன். வெள்ளைக் காரனை எதிர்த்து வீரமிக்க போர்புரிந்த கட்டபொம்மு உள்ளிட்ட பாளையக்காரர்கள்கூட வரிவசூலில் தம் நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிவதில் எந்தக் குறையும் வைக்கவில்லை என்பதற்கு அரசாங்க ஆவணங்களே ஏராளமான சான்றுகளாக உள்ளன.

பேசும் மொழி ஒன்றானாலும் இருவரின் வர்க்கங்களும் வேறு வேறல்லவா? இது அன்றைய தமிழக அரசு. இன்றும் கூட தமிழா தமிழா என்று சொல்லி தமிழ் உணர்வைத் தட்டி எழுப்பி தமிழ் நாட்டில் மாறி மாறி ஆட்சி செய்யும் அரசுகள் ஒரு வேற்றுமொழி பேசும் முதலாளியின் ஆலையில் தொழிலாளிகள் வேலைநிறுத்தம் செய்தால் தங்கள் அரசின் காவல்துறையை தமிழ்த் தொழிலாளிக்கு ஆதரவாக நிறுத்துவதில்லை. அரசு என்றாலே அது தனிச்சொத்துக்குப் பாதுகாப்பாக -உழைக்கும் வர்க்கத்தை ஒடுக்குவதற்காகத்தான்.

எனவே அது மன்னராட்சி ஆனாலும்,காலனி ஆட்சி ஆனாலும் பாளையக்காரர் ஆட்சியானலும் சொத்தை உருவாக்குகிற பாட்டாளி வர்க்கம் அச்சொத்தின் மீது உரிமை கொண்டாடாமல் பார்த்துக் கொள்வதற்காகவே அரசுகள் இருந்தன.

ஆனால் மக்களே ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கும் இன்றைய மக்களாட்சி இதற்குமுன் இருந்த ஆட்சிகளிலிருந்து வேறு பட்டதா? மக்களுக்கு - பாட்டாளி வர்க்கத்துக்கு அதிகாரம் தந்துள்ளதா?



பிரெஞ்சுப் புரட்சி

Scanned by CamScanner

# மக்களாட்சி என்னும் திரைக்குப் பின்னால்

" மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி "
"நெல்லும் உயிரன்றே. நீரும் உயிரன்றே. "
"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"
"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன்'மக்கட்கு
இறை' என்று வைக்கப்படும்"

என்று காலம்காலமாக மன்னன் இறைவனுக்குச் சமமாகக் கருதப்பட்ட நிலை ஐரோப்பாக் கண்டத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் கேள்விக்குள்ளானது.

அதற்குமுன்னால் 1215இல் இங்கிலாந்து நாட்டில் உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக அரசன் ஜான் "மகாசாசனம்(magna carta)" ஒன்றைப் பிரகடனம் செய்தான். பின்னர் வந்த பல்வேறு நாடுகளின் அரசியல் உரிமைச் சாசனங்களுக்கெல்லாம் முன்னோடியாக இந்த மகா சாசனம் கூறப்படுவதுண்டு. ஆனால் இந்தச் சாசனம் 1215ல் பாட்டாளி மக்களுக்கு எந்த உரிமையையும் தந்துவிடவில்லை. காரணம் அந்த மக்கள் எழுச்சிக்குத் தலைமை ஏற்றது அந்நாட்டின் நிலப்பிரபுக்கள்.

எனவே நிலப் பிரபுக்கள் மற்றும் வியாபாரிகளின் உரிமைகளைக் காப்பதாகவே அந்த மகா சாசனம் அமைந்துவிட்டது. அதை அடுத்து 1295இல் இங்கிலாந்தில் சாதாரண மக்களுக்கான சபை (house of commons) அமைக்கப்பட்டது. ஆனால் இதெல்லாம் உழைக்கும் மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்கிவிடவில்லை.

1776 முதல் 1783 வரை நடந்த அமெரிக்க சுதந்திரப் போர், 1789-1791 இல் நடந்த பிரஞ்சுப் புரட்சியும் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற புரட்சிகர போராட்டங்களாகும். ஆனால் வழக்கம்போல இப்புரட்சிகளும் தொழிலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட வில்லை. தலைமை தாங்கிய முதலாளி வர்க்கம் மட்டுமே இப்புரட்சிகளினால் ஆதாயம் அடைந்தது. என்றாலும் பிரஞ்சுப்புரட்சி முன்வைத்த முழக்கங்களான "சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்" என்கிற கருத்துக்கள் உலகம் முழுதும் பரவியது உண்மை.

"பிரெஞ்சுப் புரட்சியின் அடுத்தகட்டமாக பிரான்ஸ் நாட்டுத் தொழிலாளிகளின் தலைமையில் 1871ஆம் ஆண்டு "பாரிஸ் கம்யூன்" என்றழைக்கப்பட்ட ஒரு தொழிலாளி வர்க்கப் புரட்சி நிகழ்ந்தது. உண்மையில் தொழிலாளி வர்க்கம் ஆட்சிக்கும் வந்தது. ஆனால்

Scanned by CamScanner

ஏற்கனவே இருந்த அரசு பொறியமைவை தொழிலாளி வர்க்கம் அப்படியே பயன்படுத்தியது. ஏற்கனவே இருக்கும் அரசு என்பது உழைப்பாளிகளைச் சுரண்டுவதற்காக ஒடுக்குவதற்காக அந்த வேலைக்காகவே உருவாக்கப்பட்ட ஒன்று. அதை அப்படியே தொழிலாளி வர்க்கம் எப்படி பயன்படுத்த முடியும்? ரோட்டில் ஓடுவதற்காக தயாரிக்கப்பட்ட கார்களை கடலில் பயணம் செய்ய பயன்படுத்த முடியுமா? ஆகவே பாரிஸ் கம்யூன் 1831 மார்ச் 18-லிருந்து மே 28 வரை 72 நாட்கள் மட்டுமே நீடிக்க முடிந்தது.

1835 முதல் 1848 வரையிலும் இங்கிலாந்து நாட்டின் பாட்டாளி வர்க்கம் தன் சொந்தக் காலில் நின்று "அனைவருக்கும் வாக்குரிமை" என்ற கோரிக்கையை முன்வைத்து மகத்தான போராட்டங்களை நடத்தியது. சாசன இயக்கம் என்ற தொழிலாளர் இயக்கமாக அது வடிவம் கொண்டது. அப்போராட்டத்தை இங்கிலாந்து நாட்டு ஆளும்வர்க்கம் வன்முறையால் நசுக்கியது . எனினும் உலக மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை என்பது அந்தத் தொழிலாளிகளின் போராட்டத்தால் தான் வந்தது. எந்த முதலாளி வர்க்கத்தின் பெருந் தன்மையினாலும் அது வரவில்லை. இங்கிலாந்து நாட்டுத் தொழி லாளிகள் ரத்தம் சிந்தித்தான் எல்லோருக்கும் பெற்றுத்தந்தார்கள்.

சரி. அப்படி வந்த வாக்குரிமை உழைப்பாளிகளுக்கு எதையாவது பெற்றுத்தந்ததா? அரசியலை தொழிலாளிகளுக்கு சாதகமாக-இடது பக்கம்-திருப்பியதா?

ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். குடியாட்சி என்று பெயர் இருக்கலாம். மக்களாட்சி என்று பெயர் இருக்கலாம். ஜனநாயக நாடு, சோசலிச நாடு என்றுகூட அறிவிக்கப்பட்டிருக்கலாம். நாமும் அது உண்மைதானே என்று உறுதியாக நம்பிக்கொண்டும் இருக்கலாம். கடமை தவறாமல் நமது வாக்குகளை வாக்குப்பெட்டியில் போட்டிருக்கலாம். ஆனால் இந்நூலின் மூன்றாவது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படையில் நாட்டில் தனியுடமை நீடிக்கிறதா பொதுவுடமை வந்துவிட்டதா என்பதைக் கொண்டு தான் அது இடதுசாரி அரசா வலது சாரி அரசா என்பதை முடிவுசெய்ய முடியும். "தேசப் பொருளாதாரத்தின் மீது செல்வாக்குச் செலுத்த முடியாத அளவிலான சிறுசிறு தனியார் சொத்துரிமை சோஷலிசத் திற்கும்கூட இருக்கும். அது பிரச்சனை இல்லை. ஆனால், கேந்திரமான சொத்துக்கள், தொழில்களைப் பொதுவுடைமை ஆக்கும் அரசே இடதுசாரி அரசாகும்."

ஒரு நாட்டின் விளைச்சல் நிலங்களும் ஆலைகளும் சுரங்கங்களும் வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்களும் தனியார் கைகளில் பெருமுத லாளிகள் கையில் இருக்கும்வரை தொழிலாளிகள் வாழ்வில் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டுவிடாது. அரசியல் அதிகாரம் எதையும் தொழிலாளி பெற்றுவிட முதலாளித்துவம் அனுமதிக்காது. இந்தியா வில் 168000 கோடி சொத்துக்கு அதிபதிகளான டாட்டா, பிர்லா,

Scanned by CamScanner

அம்பானி போன்ற முதலாளிகளுக்கும் ஒரு ஓட்டு. உழைச்சாத்தான் சோறு என்று வாழ்கிற நமக்கும் ஒரு ஓட்டு. இதனால் நாமும் டாட்டாவும் சமம் என்கிறது நமது ஜனநாயகம். ஆனால் நடப்பு என்ன?அவரவர் பொட்டணத்தில் எவ்வளவு டப்பு இருக்கிறதோ அதற்குத் தகுந்த அளவுக்குத்தான் அவருக்கு சுதந்திரம் உண்டு. அதனால்தான் இதை வெறும் ஜனநாயகம் என்று சொல்லக்கூடாது "முதலாளித்துவ ஜனநாயகம்" என்று சொல்ல வேண்டும் என்கிறோம்.

நாம் ஏற்கனவே பார்த்தபடி அரசு என்பது என்றென்றும் தொடர்கிற நீதி,நிர்வாகம், ராணுவம், போலீஸ், சிறைச்சாலை - இவைதானே? மக்களாட்சியில் இவற்றையெல்லாம் மக்களா ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுக்கிறார்கள்? அல்லது மக்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுத்த மத்திய அரசோ மாநில அரசோ இந்த நிரந்தர அரசைக் கைவைக்கத் துணிவார்களா?தனியுடமையை ஒழிக்கத் துணிவார்களா?

அப்படித் துணிந்த அரசுகளை முதலாளிகள் கவிழ்த்தி விடுவார்கள். கேரளத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி 1957ல் முதன் முறையாக வலதுசாரிகள்மீது கை வைத்தது. உடனே அன்று மத்தியில் இருந்த நேரு தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி கேரள கம்யூனிஸ்ட் அரசை 1959இல் கலைத்தது.

"இந்தியாவைப் பொறுத்தவரை மாநில அரசு என்பது மத்திய அரசுக்கு கட்டுப்பட்ட ஒரு அமைப்பு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முக்கிய ஆதாரங்கள் அனைத்தும் குவிக்கப்பட்டுள்ள மையமாக மத்திய அரசு இருக்கிறது. அதை மீறி மாநில அரசு உருப்படியாக ஒன்றும் செய்துவிட முடியாது.

தென் அமெரிக்காவில் சிலி என்கிற நாட்டு மக்கள் 1970ஆம் ஆண்டு ஓட்டுப் போட்டுஇடதுசாரியான சால்வடார் அலெண்டேயை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் ஜோலியாக சுரங்கங்கள், இயற்கை வளங்கள், தொழிற்சாலைகளை தேசவுடைமை ஆக்கினார். வெளிநாட்டு முதலாளிகளின் சொத்துக்களையும் தேசவுடைமை ஆக்கினார். மக்கள் அமோக ஆதரவு அளித்தனர். ஆனால் அந்நாட்டு முதலாளிகள் அமெரிக்க அரசின் உதவியுடன் அந்நாட்டு ராணுவ அதிகாரிகளை விலைக்கு வாங்கி திடீரென்று ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு அவரைப் படுகொலை செய்து ஆட்சியை முதலாளி களுக்கு விசுவாசமான ராணுவத்திடம் ஒப்படைத்தனர். மூன்று ஆண்டுகள் கூட அலெண்டேயின் ஆட்சி நீடிக்கவில்லை. மீண்டும் சொத்துக்கள் முதலாளிகள் கையில் ஒப்படைக்கப்பட்டது.

"ஓட்டுப்போட்டு அதிகாரத்துக்கு வருவது என்பது கல்யாணம் முடிந்ததும் மருமகள் கையில் சாவிக்கொத்து வருவதுபோல. உண்மையான அதிகாரம் மாமனார் கையில்தான் இருக்கும்.

Scanned by CamScanner

பீரோவில் இருக்கும் சில்லறைப் பணத்தை எடுத்து செலவழிக்க (உப்பு, புளி வாங்க) மருமகளால் முடியும். அவ்வளவுதான். இது தெரியாமல் சாவிக்கொத்தை இடுப்பிலே செருகிட்டாளே என்று பேசுவது அறியாமைதான்."

அப்படியானால் வாக்குரிமை, சட்டமன்றம், பாராளுமன்றம் இவை எதற்காக இயங்குகின்றன?

லெனின் கூறுவது: " அமெரிக்கா முதல் ஸ்விட்சர்லாந்துவரை பிரான்ஸ் முதல் பிரிட்டன் நார்வே வரை (லெனின் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் நாடாளுமன்ற ஆட்சி வரவில்லை. இப்போது நாம் இப் பட்டியலில் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ளலாம்) எந்த நாடாளுமன்ற நாட்டை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்நாடுகளில் எல்லாம் "அரசுக்குரிய" மெய்யான வேலை திரைக்குப் பின்னால் நடத்தப் படுகிறது. பல்வேறு இலாக்காக்களும் அமைச்சகச் செயலகங்களும் படைத் தலைமையகங்களும் இதை நடத்துகின்றன. "பொதுமக்களை"ஏய்ப்பதற்கென்றே வாய்ப்பேச்சு பேசுவதே நாடாளுமன்றத்துக்கு அளிக்கப்பட்டிருக்கும் உண்மையான பணியாகும்"

1947இல் இந்தியா சுதந்திரம் பெற்றபோது 200 கோடிக்கு அதிபதிகளாயிருந்த இந்தியாவின் " டாப் டென்" முதலாளிகள் இன்று 168000 கோடிக்கு அதிபதிகளாக ஆனதற்கு திரைமறைவில் இயங்கும் நிரந்தர 'அரசு' தான் காரணம். பூமிக்குக் கீழே உள்ள தண்ணீரை மேலே கொண்டுவரும் ஒரு அடிகுழாயை (அடி பம்பு)ப் போல 100 கோடி இந்திய மக்களின் சட்டைப்பைக்குள் கிடக்கும் சம்பளப் பணத்தை 100 கோடி உறிஞ்சு குழாய்கள் மூலம் சடக்.. சடக்.. என்று பைப் அடித்து 'டாப் டென்' முதலாளிகளின் தொப்பைகளில் போய் விழ வைக்கிற வேலை இடைவிடாமல் கடந்த 1947 முதல் நடந்து வருகிறது. ஆகவேதான் அவர்களின் தொப்பை 200 கோடியிலிருந்து 168000 கோடியாக உயர முடிந்தது. அதன் மறுபக்கமாகவும் அதன் நேரடி விளைவாகவும் இருவேளை உணவு கூடச்சரியாகக் கிடைக்காத "வறுமைக்கோட்டு"க்குக் கீழே உள்ள மக்களின் ஜனத்தொகை 50 சதவீதத்தை எட்டிக்கொண்டிருக்கிறது. இரண்டும் நேரடியாக ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. அடிபம்ப்பை அடிக்கும் வேலைதான் அரசுக்குரியது. அதுதான் லெனின் சொல்லும் திரைக்குப் பின்னால் நடக்கும் அரசின் "மெய்யான" வேலை. அது வெளியில் தெரியாமல் இருக்க மக்களுக்குக் காட்டப்படும் பயாஸ்கோப் படம்தான் பாராளுமன்றக் காட்சிகள்.

மாற்றி மாற்றி காங்கிரஸ் ஆடும் டான்சுகளையும் பாஜக ஆடும் வெறியாட்டங்களையும் இங்கே தி. மு. க., அ. தி. மு. க. காட்டும் பிலிம்களையும் பார்த்தபடி மக்கள் சுவாரஸ்யமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்க பின்னால் திரைமறைவில் பம்படிக்கும் வேலை சுத்தமாக நடந்து கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்துக்கு

Scanned by CamScanner

உள்ளே சென்று இந்தத் திரையைக் கிழிக்கும் வேலையைச் செய்வதற்காகத் தான் இடதுசாரிக் கட்சிகள் உள்ளே போகின்றன. இருக்கும் வலுவுக்குத் தக்க அவர்களும் உள்ளே குரல் கொடுக்கிறார்கள். இருப்பினும் அந்த 596 வலதுசாரிக் கட்சிகளின் குரலையும் தாண்டி இடதுசாரிகளின் குரல் ஒலிக்கவேண்டுமானால் அவர்களின் சக்தி இன்னும் பல மடங்கு பெருகியாக வேண்டும்.

பாராளுமன்றம் சுத்த வேஸ்ட் என்று இடதுசாரிகளும் உழைப்பாளி வர்க்கமும் ஒதுங்கிநிற்க முடியுமா? அப்படி ஒதுங்கி நிற்பது யாருக்கு லாபமாக முடியும்?உழைப்பாளி வர்க்கத்தின் கட்சி தன் சொந்த பலத்தையும் தன் சொந்த வர்க்கமான தொழிலாளி - விவசாயி வர்க்கத்தின் அரசியல் உணர்வையும் அசைக்கமுடியாத அளவுக்கு உயர்த்திக் கொள்ளும் வரை பாராளுமன்றம் உட்பட- கிடைக்கும் சகல வாய்ப்புகளையும் பயன்படுத்தியாக வேண்டும்.

ஆளும் வர்க்கத்தின் எந்த உறுப்பினர் பாராளுமன்றத்தின் மூலம் மக்களை அடக்கி ஒடுக்கி வேண்டும் என்பதைச் சில ஆண்டுகளுக்கு ஒரு முறை தீர்மானிப்பதே முதலாளித்துவ நாடாளுமன்ற முறையின் சாரப்பொருள் என்பதை இடதுசாரிகள் நன்றாகவே அறிவார்கள். எனினும் அதைத் தொழிலாளிகள் அறியும்படி செய்ய பாராளுமன்றத்துக்கு உள்ளே சென்றும் போராடியாக வேண்டும். தவிரவும், பாசிச ஆட்சி ராணுவ ஆட்சி இவற்றை விட நாடாளுமன்ற ஜனநாயகத்தில் தொழிலாளிகள் பேசுவதற்கும்,அணி சேர்ந்து தம்மைத் தயார்செய்து கொள்வதற்கும் ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது.

ஜனநாயக ஆட்சி முறை என்பது இடதுசாரிகளுக்கு விளையாடக் கிடைத்த ஒரு மைதானம். கிடைக்கும் கபடி மைதானத்தில் முடிந்த வரை பாட்டாளிகளுக்காகச் சடுகுடு பாடி அதைப் பயன்படுத்தத் தான் வேண்டும். அதே சமயம் பாராளுமன்ற அரசியல் மட்டும் இருந்தால் போதாது. தெருக்களில் மக்களைத் திரட்டி நடத்தும் இயக்கங்களும் எள்முனை அளவும் குறையாது நடத்தப்பட வேண்டும்.

புரட்சிகரமாக நிலைமைகள் உருவாகும்வரை பாராளுமன்றத்தைப் பயன்படுத்தியே தீரவேண்டும். மக்களைச் சந்திக்கத் திராணியற்றவர்கள்தான் மொத்தமாகப் பாராளுமன்றத்தையே புறக்கணிப்பார்கள். அது சோறு வேகு முன்பே பானைக்குள் கைவிடும் தற்கொலைப் பாதையாகவே முடியும்.

Scanned by CamScanner



7

# ஆளும் கட்சிகளும் அந்தர் பல்டிகளும்

நாம் ஏற்கனவே சொன்னது போல மன்னராட்சி முறை வரைக்கும் இருந்த பல தரப்பட்ட அரசுகளும் அடியாட்களை வைத்து மக்கள் காடு கரைகளில் உழைத்துப் போட்டதை அள்ளிக் கொண்டு போனார்கள். அப்புறம் வந்த முதலாளிகள் ரொம்ப விவரமானவர்கள். விஞ்ஞானம் வளர்ந்த பிறகு ஆள வந்த வர்க்க மல்லவா? அதுமட்டு மல்லாமல் பழைய பாட்டாளி வர்க்கமான விவசாயிகளையும் விவசாயக் கூலிகளையும்போல இப்போது உள்ள தொழிலாளிகள் அவ்வளவு ஏமாளிகள் அல்லவே? கார்ல் மார்க்ஸ் எழுதியதை யெல்லாம் படித்துவிட்டு உரிமைக்குக் குரல் கொடுத்து அரச சபையில் இடதுபக்கம் இடமும் பெற்று வாக்குரிமையும் பெற்றவர்களாச்சே! எனவே அவர்களை முதலாளிகள் கொஞ்சம் புத்திசாலித்தன மாகத்தான் ஏமாற்றமுடியும்.

ஒருநாட்டில் மட்டும் கொள்ளையடிப்பவன் முதலாளி. பல நாடுகளில் கொள்ளையடிப்பவன் ஏகாதிபத்தியவாதி. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி போன்ற சில நாடுகளில் உள்ள முதலாளிகள் உலகம் பூராவிலும் சொத்து வைத்திருக்கிறார்கள். இந்த ஏகாதிபத்தியவாதிகளுக்கும் உள்நாட்டு முதலாளிகளுக்கும் அவர்கள் சொன்னபடி கேட்கிற சில கட்சிகள் வேண்டும். அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் எல்லாம் இரண்டே கட்சிகள்தான் உண்டு. ரெண்டுமே வலதுசாரிக்கட்சிதான். இரண்டில் ஏதாவது ஒரு கட்சிக்கு நாட்டு மக்கள் ஓட்டுப் போட வேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒருகட்சியை மக்களுக்குப் பிடிக்க வில்லை என்றால் அடுத்த தேர்தலில் அதை இறக்கிவிட்டு அடுத்த கட்சிக்கு ஓட்டுப் போட்டுவிடலாம். அதுவும் இன்னொரு வலதுசாரிக் கட்சி தானே. ஆகவே எது வந்தாலும் முதலாளிகளுக்கு ஆதரவாகத்தான் இருக்கும்.

நாள் ஆக ஆக மக்களுக்கு வெறுத்துப்போகும். அது மாதிரி சமயங்களில் யாராவது ஒரு பெரிய தலைவரை யாரையாவது விட்டு சுட்டுத் தள்ளி விடுவார்கள். உடனே மக்களுக்கு இரண்டுமே வலது கட்சிகள்தான் என்பது மறந்து போய்விடும். அனுதாபஓட்டை அள்ளிக் கொண்டு அதே முதலாளித்துவக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடும். அல்லது ஏதாவது ஒரு நாட்டின் மீது போர் அல்லது நமது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து என்று புரளியைக் கிளப்பிவிட்டு

Scanned by CamScanner




மக்களின் தேசபக்த உணர்வைத் தூண்டிவிட்டு ஓட்டு வாங்கி விடுவார்கள். அது அமெரிக்காவின் ஈராக் போராக இருக்கலாம் அல்லது இந்தியாவின் கார்கில் போராக இருக்கலாம். இதையெல்லாம் மீறியும் மக்களுக்கு இந்தத் தேர்தல்கள் மீது வெறுப்பு வரத்தான் செய்யும். அதனால்தான் இன்றும் அமெரிக்காவில் சராசரியாக 25 சதவீத மக்கள்தான் ஓட்டுப் போடுகிறார்கள்.

இந்தியா 1947ல் சுதந்திரம் பெற்றது. நாம் முன்னமே பார்த்தது போல மக்கள் எத்தனை கோடிப்பேர் தெருவில் இறங்கிப் போராடினாலும் அப்போராட்டத்தின் பலன் மக்களுக்குக் கிடைத்துவிடாது. அப்போராட்டத்தின் தலைமை யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் பலன்கள் போய்ச்சேரும். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கோடான கோடி உழைப்பாளி மக்கள் ரத்தம் சிந்திப் போராடினர். இருப்பினும் தலைமை தாங்கியது முதலாளிகள். எனவே கிடைத்த சுதந்திரம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதாகவே அமைந்தது.

இந்திய முதலாளிகளுக்கும் அவர்கள் சொன்னபடி கேட்கும் கட்சிகள் தேவைப்பட்டன. முதல் தேர்தலில் இருந்து 1977 வரையிலும் இந்திய தேசிய காங்கிரஸ் அவர்களின் கட்சியாக மக்கள் செல்வாக்குடன் ஆட்சி புரிந்தது. அதன் பிறகு காங்கிரசின் செல்வாக்கு சரிய ஆரம்பித்தது. ஆகவே முதலாளிகளுக்கு செல்வாக்கான வேறு ஒரு கட்சி தேவைப்பட்டது. ஆனால் 1999 வரை அவர்கள் விரும்பிய இன்னொரு வலதுசாரிக் கட்சி (காங்கிரசுக்கு மாற்றாக மக்களுக்குக் காட்டுவதற்கு) பெரிதாக வளரவில்லை. பாரதிய ஜனதாக்கட்சி இந்து-முஸ்லீம் கலவரத்தைத் தூண்டிவிட்டு, மசூதியை இடித்து, படுகொலைகள் புரிந்து பலவிதமான தகிடுதித்தங்களும் செய்து இன்று (இந்திய முதலாளிகளின் மனம் குளிரும் விதமாக) இரண்டாவது மாற்றாக வந்துவிட்டது.

சார்.. சார்.. நிறுத்துங்க.. விட்டா.. நாட்டில நடக்கிற எல்லாத்தையுமே முதலாளிகள் சதின்னு சொல்லி காதிலே பூச்சுத்திடுவிங்க போல இருக்கே...

சரி. நடந்த சில உண்மைகளை ஞாபகப்படுத்தினால் இன்னும் கொஞ்சம் தெளிவு கிடைக்கும்.

1984 தேர்தலுக்குப் பிறகு காங்கிரசுக்கு மாற்றாக ( முதலாளிகள் விரும்பியபடி) பி.ஜேபி. உருவாகவில்லை. இரண்டே இரண்டு எம்.பி. சீட்டுகள்தான் அக்கட்சிக்குக் கிடைத்திருந்தது. அனால் மார்க்சிஸ்ட்

Scanned by CamScanner

கம்யூனிஸ்ட் கட்சி 22 சீட்டுகள் வைத்திருந்தது. மனச்சாட்சி இருந் திருந்தால் உண்மையிலேயே ஒரு மாற்று என்று மக்கள் மத்தியில் இடதுசாரிகளைத்தான் காட்டியிருக்க வேண்டும். ஆனால் முதலாளிகள் கையில் இருக்கும் சகல பத்திரிகைகளும் தொலைக் காட்சிகளும் இரவுபகலாக ஓவர்டைம் செய்து பாடுபட்டு பி. ஜே. பி. தான் ஒரு மாற்று என்று முன்னிறுத்துவதில் வெற்றி பெற்று விட்டன. என்ன எஜமான விசுவாசம்!

இருப்பினும்கூட பி. ஜே. பி. க்கு மக்கள் அமோக ஆதரவு தந்துவிட வில்லை. தனி மெஜாரிட்டி இரண்டு முதலாளித்துவக் கட்சிகளுக்கும் கிடைக்கவில்லை. அதற்காக சும்மா இருந்துவிட முடியுமா ? பிராந் திய கட்சிகள் என பலதும் ஓடோடிவந்து ஒன்றுகூடி பி.ஜே.பியை ஆட்சியில் நீடிக்கவைக்க அரும்பணி ஆற்றி காங்கிரசுக்கு மாற்றாக இன்னொரு வலதுசாரி கட்சியை ஒருவழியாக உருவாக்கி விட்டனர்.

“இதுபோக இடதுசாரிகள் வலுவாக உள்ள கேரளம், மேற்கு வங்கம், திரிபுரா போன்ற மாநிலங்களில் பி.ஜே.பி.யும்., காங்கிரசும் இடதுசாரிகளுக்கு எதிராக தோளோடு தோள் நின்று வேலை செய்வதை நாடே அறியும்”

கடந்த பாராளுமன்றத்தில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்தது. காங்கிரஸ் எதிர்வரிசையில் இருந்தது. ஆனால் இன்சூரன்ஸ் துறை ஒழுங் கமைப்புச் சட்டம் மற்றும் மின்சாரச் சட்டம் 2003 போன்றவற்றை இரண்டு கட்சிகளும் ஒருசேரக் கைதூக்கி ஆதரித்ததை நாடே பார்த்தது. இடதுசாரிகள் மட்டுமே உறுதியாக எதிர்த்துப் போராடினர்.

எல்லாப்பத்திரிகைகளும் முதலாளிகள் கையில்தானே இருக்கின் றன. எனவே அவை இந்தக் கோல்மால் வேலைகளை யெல்லாம் பெரிதாகக் கண்டுகொள்ளாமல் இருக்க பலவிதமான ஜகஜாலங்கள் செய்து மக்கள் மனங்களை கடந்த 50 ஆண்டுகளில் தயார் செய்து விட்டன. இடதுசாரிகள்தான் அடிக்கடி அணி மாறுவதாக ஒரு படத்தையும் ஒட்டி ஒட்டி மக்கள் மூளைகளில் மனப்பாடமாகப் பதியவைத்து விட்டனர்.

இந்தியா போன்ற பல்வேறு தேசிய இனங்களையும் விதவிதமான கலாச்சாரங்களையும் கொண்ட நாட்டில் அமெரிக்க, பிரிட்டன் பாணியில் இரண்டு கட்சிதான் என்று அடித்துப் பேசுவது லாயக்குப் படாது என்பதைப் புரிந்துகொண்ட முதலாளிகள் 596 வலதுசாரிக் கட்சிகளை அனுமதித்துள்ளனர். ஆனால் காங்கிரஸ் அல்லது பி.ஜே.பி. இந்த இரண்டுக்கும் பின்னால் இந்த 596 உம் அணிவகுத்து ஒழுங்காக நின்றுவிட வேண்டும். இடதுசாரிகள் தேசிய அளவில் ஆகப் பெரிய சக்தியாக வந்துவிட்டால் காங்கிரசும் பி.ஜே.பி.யும் இணைந்து ஓ

Scanned by CamScanner

கட்சியாகக் கூட மாறி நிற்கலாம். எதுவும் நடக்கும். அரசு இடதுசாரி களிடம் மட்டும் போய்விடக்கூடாது.

சரி. இவ்வளவுக்கும் மேலே ஒரு சம்பவத்தை ஞாபகப் படுத்துவது இந்த ஜனநாயகத்தை(!)ப் புரிந்துகொள்ள மேலும் உதவியாக இருக்கும். 1991 தேர்தல்! இரண்டு கட்டமாக தேர்தல் நடந்தது. 20. 5. 1991 இல் முதல் கட்டத் தேர்தல் நடந்தது. நடத்தப்பட்ட பல்வேறு கருத்துக்கணிப்புகளும் முதலாவது இடத்தைப் பிடிக்கப்போவது காங்கிரசும் அல்ல. பி. ஜே. பி. யும் அல்ல. இடதுசாரிகளின் வலுவுடன் தேசியமுன்னணிதான் என்று அறிவித்தன. தேசியமுன்னணியின் தலைவர் வி.பி. சிங் "இடதுசாரிகள் என் இயற்கையான கூட்டாளிகள்" என்று வேறு சொல்லியிருந்தார்.

22. 5. 91 அன்று காலை 7 மணிக்கு இரண்டாம் கட்டத் தேர்தல் நடக்க இருந்தது. தேர்தல் நடப்பதற்கு சரியாக 9 மணி நேரத்துக்கு முன்னால் 21.5.91 இரவு 10 மணி அளவில் ஸ்ரீபெரும்புதூரில் காங்கிரஸ் தலைவர் ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்படுகிறார் .10. 20 மணிக்கு கொலை நடந்தது. 10. 40 மணிக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு நண்பரின் தொலைபேசிச் செய்தியின் மூலம் இக்கொலை பற்றித்தான் அறிந்துகொண்டதாக அப்போதைய தேர்தல் கமிஷனர் டி.என்.சேஷன் கூறினார்.

அடுத்த சில நிமிடங்களில் மறுநாள் காலை 7 மணிக்கு நடக்க இருந்த தேர்தலை மூன்று வாரங்களுக்குத் தள்ளி வைத்தார் சேஷன். யாரையும் கலந்தாலோசிக்கவில்லை . எந்த மரபும் பின்பற்றப் படவில்லை. அந்த மூன்று வார காலம் என்பது ஒவ்வொரு தொகுதிக் கும் ராஜிவ் காந்தியின் அஸ்தியைக் கொண்டுசெல்வதற்கும், காங் கிரஸ் அமோக வெற்றி பெறும் எனப் புதிய கருத்துக் கணிப்புகளை பத்திரிகைகள் மக்கள் மண்டைகளில் திணிப்பதற்கும், தமிழகத்தில் அ. தி. மு. க தொண்டர்(!) படை தி. மு. க மற்றும் இடதுசாரி கட்சி அலுவலகங்கள், பத்திரிகைகள்,தொண்டர்களைத் தாக்கி அவர்கள் தான் கொலைக்குக் காரணம் போல ஒரு தோற்றத்தை உருவாக்கு வதற்கும் தேவைப்பட்டது.

எதிர்பார்த்தபடி அனுதாப அலைவீசி காங்கிரஸ் இரண்டாவது கட்டத் தேர்தலில் அதிக இடங்களைப் பெற்றது. முதல் கட்டத் தேர்தலில் இடதுசாரி-தேசிய முன்னணி 77 சீட்டுகள் பெறும் என்று கருத்துக்கணிப்புகள் சொல்லி இருந்தன. ஆனால் உண்மையில் அவர்களுக்கு 91 சீட்டுகள் கிடைத்தன. கம்யூனிஸ்டுகள் மட்டுமே 44 இடங்கள் பெற்றிருந்தனர்.

ஆகவே ஏதாவது ஒரு வலதுசாரிக் கட்சி ஆட்சியில் இருப்பதை உத்தரவாதம் செய்வதில் சகல 596 கட்சிகளும் பத்திரிகைகளும்

Scanned by CamScanner

தொலைக் காட்சிகளும் எஜமான விசுவாசத்துடன் கண்ணும் கருத்து மாக இருக்கும் என்பதுதான் கடந்த 50 ஆண்டுகால இந்திய வரலாறு.

ஆனால் இடதுசாரிக் கட்சிகள் பற்றி அவற்றின் சொந்தக்காரர் களான உழைக்கும் மக்கள் சரியாகப் புரிந்து அக்கறை செலுத்திட வேண்டும். இதன் மூலமே அரசியல் அரங்கில் உழைக்கும் மக்களுக்குச் சாதகமான நிலைமை உருவாகும். எந்தப்பக்கமும் தாவுவதற்கு முன்னங்கால்களை ஊன்றியபடி எந்த நேரமும் தயாராக இருக்கிற 596 கட்சிகளில் அந்தந்த நேரத்தில் எது உறுதியாக நிற்கிறதோ அந்தக் கட்சிகளை இணைத்துக் கொண்டு தேசிய ஆபத்துகளைத் தடுக்க இடதுசாரிகள் அணி சேர்க்கை வைத்துப் போராடி வருகிறார்கள். இடது சாரிகளின் சொந்தபலம் வளரும்வரை இதுதான் தொடரும்.

2004-ல் நடந்து முடிந்த 14வது மக்களவைத் தேர்தலில் இடதுசாரிகளுக்கு 61 இடங்கள் கிடைத்தன. காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு 219 இடங்கள். இடதுசாரிகள் வெளியி லிருந்து ஆதரவு தர - காங்கிரஸ் தலைமையில் புதிய அரசு அமைந்தது. இந்த அரசில் இடதுசாரிகள் ஏன் பங்கேற்கவில்லை என்று நல்லெண் ணத்துடன் பலர் கேட்டார்கள். இடதுசாரிகள் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாக குறை கூறினார்கள். ஒன்றை மறந்துவிடக்கூடாது. 543 பேர் கொண்ட மக்களவையில் 61 இடதுசாரிகளும், 482 வலதுசாரிகளும் உட்கார்ந்திருக்கிறார்கள். "**புதிய அரசின் கொள்கைகளை தீர்மா னித்து அதை செயல்படுத்தும் அளவுக்கு வலு இருந்தால்தான் அரசில் இணைவது**" என்கிற மார்க்சிஸ்ட் கட்சியின் முடிவு முக்கியமானது.

நடக்கும் சம்பவம் ஒவ்வொன்றும் முதலாளித்துவ சதி என்று கண்ணை மூடிக் கொண்டு மட்டையடியாக நாம் கூறவில்லை. எல்லா வலதுசாரி அரசியல் கட்சிகளையும் முதலாளி வர்க்கம் கூப்பிட்டு பணம் கொடுத்து " போய் கட்சி ஆரம்பிங்கப்பா "என்று சொல்லி கட்சி ஆரம்பித்ததாக நாம் சொல்லவில்லை. மக்களின் அபிலாசைகள், கோரிக்கைகள், பிரச்சினைகள் இவற்றை முன் வைத்து மக்களிடம் ஒரு கட்டத்தில் செல்வாக்குப் பெற்று வளரும் கட்சிகளைப் பின்னர் காலப்போக்கில் முதலாளிகள் பயன்படுத்திக்கொள்வர். தற்செயல் நிகழ்வுகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதிலே நொடிதோறும் கவனமுடனும் கூர்மையான புத்திசாலித்தனத்துட னும் முதலாளிகளும் முதலாளித்துவ அறிவாளிகளும் மீடியாக்களும் திகழ்கின்றன என்பதைத் தொழிலாளி வர்க்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

தொழிலாளி வர்க்கம் தனக்கான சொந்த அறிவாளிகளையும் பத்திரிகை, மீடியாக்களையும் உருவாக்குவதுதான் இதற்கு மாற்று. இருக்கிற ஊடகங்களை நமக்கு சாதகமாகப் பயன்படுத்துவது சாத்தியமில்லை.

Scanned by CamScanner




# 8

## சோசலிச அரசு எப்படி இருக்கும்?

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி "இந்தியா ஒரு மதச்சார்பற்ற ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்று பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்த சோசலிசம் என்கிற வார்த்தை பலராலும் பயன்படுத்தப்படுகிறது. அர்த்தம் புரிகிறதோ இல்லையோ அது ஒரு நல்ல வார்த்தை என்கிற அளவில் அரசியல்வாதிகள் புரிந்து வைத்துள்ளனர்.

எம். ஜி. ஆர். ஒருமுறை லண்டன் பி. பி. சி. யில் பேட்டி கொடுத்தார். அ. தி. மு. க. கட்சியை ஆரம்பித்த சமயம் அது. அண்ணாயிசம்தான் எங்கள் கட்சியின் கொள்கை என்று அவர் அப்போது கூறிவந்தார். அண்ணாயிசம் என்றால் என்ன என்று பி. பி. சி. நிருபர் கேட்டபோது எம். ஜி. ஆர். சொன்ன பதில் "கேபிடலிசம், சோசலிசம்,கம்யூனிசம் மூன்றும் சேர்ந்ததுதான் அண்ணாயிசம்" என்பது. ஆனால் கேபிட லிசம் என்றால் முதலாளித்துவம் அதாவது தனியுடைமை வாழப் பாடுபடுவது அல்லவா? அந்தக் கேபிடலிசத்தின் அழிவில்தான் சோசலிசமும்-அதாவது சமூக உடைமையும் அதன் அடுத்த கட்ட மான கம்யூனிசமும்-அதாவது பொதுவுடைமையும் தோன்ற முடியும். இந்த மூன்றும் எப்படி ஒன்று சேர முடியும்? "தனியுடைமைக் கொடுமைகள் தீர தொண்டு செய்யடா. ." என்கிற கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடலுக்கு சினிமாவில் வாயசைத்த எம்.ஜி.ஆர். கட்சி அமைத்து ஆட்சியைப் பிடித்தபோதும் தனியுடை மையை ஒழிப்பது பற்றி வாயே திறக்கவில்லை என்பது நமக்குத் தெரியும்.

1956இல் ஆவடியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநாடும் இனிமேல் காங்கிரஸ் கட்சியின் லட்சியம் சோசலிசம்தான் என்று உரக்கப் பிரகடனம் செய்தது. செல்வாக்கு மிக்க தலைவரான ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் இப்படி அறிவித்ததால் மக்கள் எல்லோரும் ஏதோ நடக்கப்போகிறது என்று ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. சோசலிசமும் வரவில்லை. கம்யூனிசமும் வரவில்லை. 1947 முதல் 1977 வரை இடைவெளி இல்லாமல் காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தும் சோசலிசத்தை நோக்கி ஒரு இன்ச் கூட நாடு நகரவில்லை.

இப்போது பாரதிய ஜனதாக் கட்சி வந்து என்ன சொல்கிறது என்றால் "கடந்த 50 ஆண்டுகாலமாக காங்கிரஸ் ஆட்சியில்

Scanned by CamScanner

சோசலிசத்தைப் பார்த்துவிட்டோம். நாடு முன்னேறவில்லை. இனிமேல் உலகமயமாக்கலின் பகுதியாக தனியார்மயத்தை ஊக்குவிப்போம் "என்கிறார்கள். என்னா பிராடுப்பேர்வழிகளய்யா! சோசலிசம் என்று காங்கிரஸ்காரர்கள் தாளில்தான் எழுதி வைத்தார்கள். அவ்வளவுதான் . அதை நக்கினால் இனிக்கவா செய்யும். நடைமுறையில் காங்கிரசும் பா. ஜ. கவும் ஒரே கொள்கை-தனியுடைமைக்கு ஆதரவான - பொருளாதாரக் கொள்கை உடையவைதான். சோசலிசத்துக்கு எதிரானவைதான். (பா. ஜ. க கூடுதலாக ஒரு மதவெறிக் கொள்கையையும் வைத்துள்ளதால் கூடுதல் ஆபத்தானது)

எனவே புரிந்தோ புரியாமலோ பேசப்படும் வார்த்தை ஜாலமாக சோசலிசத்தைப் பலரும் பயன்படுத்துகின்றனர். ஆனால் இது அல்ல சோசலிசம்.

உண்மையிலேயே ஒரு சோசலிச அரசு எப்படி இருக்கும்? அது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் இருக்கும். விவசாயிகளுடன் வலுவான கூட்டுக் கொண்டிருக்கும். ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக ஆலைகள், சுரங்கங்கள்,வங்கிகள்,போக்குவரத்து போன்ற அடிப்படையான கேந்திரமான - தொழில்களையும் நிறுவனங்களையும் அரசுடைமை ஆக்கும். போலீசும் ராணுவமும் பாட்டாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படும் விதமாக மாற்றி அமைக்கப்படும். ஏற்கனவே உள்ள போலீசை வைத்துக்கொண்டு சோசலிசத்தைக் கட்டி அமைக்க முடியாது. பழைய போலீஸ் தொழிலாளிகளை ஒடுக்குவதற்கும் தனிச்சொத்தைப் பாதுகாக்கவும் மட்டுமே பயிற்சி பெற்றுள்ளது. எனவே எல்லாமே மாற்றி அமைக்கப்படும். பணம்தான் பெரிசு-பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதைத் தலைகீழாக மாற்றி-உழைப்புதான் உயர்ந்தது என்பதை சோசலிச அரசு நடைமுறைப் படுத்தும்.

ஆனால், சிலர் நினைப்பதைப் போல தனிப்பட்ட சிறு உடைமைகளைக்கூட சோசலிச அரசு பறித்துவிடும் என்று கூறுவது முற்றிலும் தவறு. சமூகத்தின் பொருளாதாரத்தையே தீர்மானிக்கும் உற்பத்திக் கருவிகளையும் உற்பத்தி சாதனங்களையும் (ஆலைகள், சுரங்கங்கள், வங்கிகள் போல) தான் பொதுவுடமை ஆக்கும். சிறுசிறு தனி உடமை சோசலிசத்திலும் நீடிக்கத்தான் செய்யும்.

"ஜனநாயகம் என்ற வார்த்தை நல்ல அர்த்தமுள்ள வார்த்தை. ஜனங்களை நாயகனாக்கும் வார்த்தை. ஆனால் நடைமுறையில் ஜனநாயகம் என்பது பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களை ஒடுக்கி ரொம்பச் சிறுபான்மையினரான முதலாளிகளைப் பாதுகாக்கிறது என்பதை ஏற்கனவே பார்த்தோம். அதற்கு மாறாக சோசலிச அரசு பெரும்பான்மையான பாட்டாளிகளுக்கு ஆதரவாக **உண்மையான ஒரு ஜனநாயகமாக** (வரலாற்றில் முதன் முறையாக)

Scanned by CamScanner

இருக்கும். பாட்டாளி வர்க்கத்துக்கே சர்வ அதிகாரத்தையும் அது பெற்றுத்தரும். ஆகவே அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்று அழைக்கப்படும்."

அதில் உழைக்காமல் யாரும் ஜாலியாக இருக்க முடியாது. எல்லோரும் அவரவர் சக்திக்கேற்ப உழைக்க வேண்டும். அந்த உழைப்புக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். மக்கள் சோசலிச உணர்வுடன் சமூகத்துக்காக உழைக்கப் பயிற்றுவிக்கப் படுவார்கள். அப்படிப் பயிற்றுவிப்பதில் கோளாறு ஏற்பட்டால் சோசலிச அரசுக்குச் சிக்கல் வரும்.

அப்படி உலகில் முதலில் தோன்றிய சோசலிச அரசு ரஷ்யாவில் உருவான சோவியத் யூனியன் ஆகும். சோவியத் யூனியன் என்றால் பஞ்சாயத்துகளின் கூட்டமைப்பு என்று பொருளாகும். 1917இல் அங்கே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆட்சிக்கு வந்தது. சொத்துக் களை தானாக சில முதலாளிகள் அரசிடம் ஒப்படைத்தார்கள். மற்றவர்களிடமிருந்து சோவியத் அரசு பறித்து பொதுவுடைமை ஆக்கியது. எல்லோருக்கும் உள்ள பங்கு பழைய முதலாளிகளுக்கும் தரப்பட்டது. ஆனால் அவர்களும் எல்லாரையும் போல உழைக்கவேண்டும் என்று சட்டம் போடப்பட்டது.

"ஆதிகாலத்தில் இருந்த பொதுவுடைமை 1917இல் சோவியத் புரட்சியின் மூலம் மீண்டும் இப்பூமிக்கு வந்தது. லட்சக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த பாட்டாளி மக்கள் முதன் முறையாக ஆட்சியில் அமர்ந்தனர். உலகம் முழுவதும் அடிமைப் பட்டுக் கிடந்த நாட்டு மக்கள் இதைக் கண்டு ஆவேசமடைந்து அவரவர் நாடுகளில் விடுதலைத் தீயை மூட்டி வளர்த்தனர். ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி என்று நம்ம பாரதியாரும் சோவியத் புரட்சியைப் பாடி வரவேற்றார். இந்தியா, சீனா உள்ளிட்ட எல்லா நாட்டு விடுதலைப் போராட்டங்களுக்கும் சோவியத் நாடு சகலவிதத்திலும் உதவியாக இருந்தது. ஆட்சிக்கு வந்த முதல் பத்து ஆண்டுகளுக்குள்ளேயே எல்லா மக்களுக்கும் கல்வியும், வேலையும் அளிக்கப்பட்டது. வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தேவையில்லாத தால் மூடப்பட்டன. நாட்டில் குற்றங்கள் வேகமாகக் குறைந்தன. நம் நாட்டுக் கவி ரவீந்திரநாத் தாகூர் சோவியத் நாட்டில் ஒரு பள்ளிக் கூடத்துக்கு சென்றார். பள்ளிக் குழந்தைகளிடம் ஒரு கணக்கு கேட்டார். ஒரு கூடை மாம்பழம் நூறு ரூபாய்க்கு வாங்கி அதை இருநூறு ரூபாய்க்கு விற்றால் விற்றவருக்கு என்ன கிடைக்கும் என்பதுதான் கணக்கு. நம்ம ஊர்ப்பிள்ளைகள் டாண் என்று பதில் சொல்லிவிடுமல்லவா நூறு ரூபாய் லாபம் கிடைக்கும் என்று. ஆனால் சோவியத் நாட்டுப் பிள்ளைகள் கொஞ்சம் யோசித்து, பிறகு சொன்ன பதில் 'அப்படி விற்பவருக்கு ஜெயில் கிடைக்கும்'. சோவியத் பாட்டாளிகள் செய்த ஒவ்வொரு செயலும் உலகமெங்கும் பரவியது."

Scanned by CamScanner

உலகம் பூராவும் சோவியத் யூனியன் பற்றிய பேச்சாகவே இருந்தது. பாரதியார், ரவீந்திரநாத் தாகூர்,தந்தை பெரியார் போல உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களும் தலைவர்களும் ஆகா இதுதான் உண்மையான மக்கள் அரசு என்று புகழ்ந்து பேசினர். சீனா, வியத்நாம், கொரியா, கியூபா, கிழக்கு ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லேவியா, ருமேனியா போன்ற பல நாடுகளில் முதலாளித் துவம் வீழ்த்தப்பட்டு சோசலிச அரசுகள் தோன்றின.

முதலாளிகளுக்கெல்லாம் தலைமைச் செயலகம் அமெரிக்கா அல்லவா? பார்த்தான் அமெரிக்காக்காரன். அடடா இது இப்படியே போனால் நம்ம தலைக்கே ஆபத்தாகப் போய்விடுமே என்று பயந்தான். மற்ற முதலாளி நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், இத்தாலி, பெல்ஜியம் போன்றவற்றுடன் கலந்து சதியாலோசனை செய்தான். பல்வேறுவிதமான நெருக்கடிகளையும் கொடுத்தான். ராணுவரீதியாகவும் பல நடவடிக்கைகளை எடுத்தான். சோசலிச நாடுகள் செய்த தவறுகள் சில அவனுக்குச் சாதகமாக அமைந்தன. ரஷ்யாவின் பழைய முதலாளிகளும் உதவி செய்தனர். சோவியத் யூனியன் மற்றும் சில நாடுகளில் சோசலிசத்தை கவிழ்த்தி மீண்டும் முதலாளித்துவத்தைக் கொண்டு வந்துவிட்டான். வசதி படைச்சவன் லேசில் விடமாட்டான் அல்லவா?

ஆனாலும் அங்குள்ள மக்கள் மீண்டும் சோசலிசத்தைக் கொண்டுவருவதற்காக தொடர்ந்து போராடி வருகிறார்கள். நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் முதலாளித்துவத் துக்கும் சோசலிசத்துக்கும் இடையில் நடக்கும் சண்டைதான் உலகத்தில் அடிப்படையான சண்டை என்பதுதான். கட்சிகளுக்கு இடையே நடக்கும் சண்டையெல்லாம் சும்மா உதார். . .

இந்தியாவில் சோசலிச அரசை உருவாக்குவது இந்திய தொழி லாளிகள் கையில்தான் உள்ளது. நாட்டிலுள்ள பல தொழிற் சங்கங்கள் தங்களுடைய சங்கத்தின் லட்சியமாக சோசலிசத்தைத் தங்களுடைய சங்க அறிக்கைகளிலும் சங்க விதிமுறைகளிலும் எழுதிவைத்துள்ளார்கள். ஆனால் எழுதிவைத்துவிட்டு வழக்கம் போல சம்பளம்,போனஸ் என்று பொருளாதாரப் பிரச்னைகளை மட்டுமே தொழிலாளிகளிடம் பேசுகிறார்கள். அப்படியே 50 வருசம் போய்விட்டது. இப்போது தொழிலாளிகளும் "சோசலிசமா? அதை விடுங்க. முதல்ல போனஸ்ஸைப் பற்றிப் பேசுங்க" என்று ஆகி விட்டார்கள். இந்த நிலையை மாற்றியே தீரவேண்டும்.

சோசலிசத்துக்காகப் போராடுவது தொழிலாளியின் சரித்திரக் கடமையாகும்.

Scanned by CamScanner

# கலாச்சார அரசியலும் கலாச்சாரத்தின் அரசியலும்

தமது சொந்த ரத்தமான இடதுசாரிகளை 600 கட்சிகளில் ஒரு கட்சியாக- பத்தோடு பதினொன்றாக இந்தியத் தொழிலாளி வர்க்கம் பாவிப்பதற்குக் காரணம் என்ன?அது அவர்களின் அறியாமையா? நிச்சயமாக இல்லை. அப்படிப் புரிந்து கொள்ளும் விதமாகப் பன்னெடுங்காலமாக மக்களின் மனங்கள் பண்படுத்தப்பட்டுள்ளன கலாச்சார ரீதியாக அப்படி மக்கள் தயாரிக்கப் பட்டுள்ளனர்.

**பண்பாடு அல்லது கலாச்சாரம் என்றால் என்ன?**

மனித மனங்களை பாடம் செய்யும் வைத்தியம்தான் பண்பாடு அல்லது கலாச்சாரம். ஆளும்வர்க்கம் தன் தேவைகளுக்கு ஏற்ப மக்களின் மனங்களை பண்படுத்தும். அப்படிப் பண்படுத்துவதற் கென்றே பல பண்பாட்டு நிறுவனங்களை அது படைத்துள்ளது. மனித குலத்தின் நாகரீக வளர்ச்சியில் தற்செயலாக உருவான பொதுப்புத்தி(Common Sense)மற்றும் கலாச்சாரக் கூறுகளின் மீது ஆளும் வர்க்கம் தாக்குதல் தொடுக்கும்-பண்பாட்டு நிறுவனங்கள் மூலமாக.

சில உதாரணங்களை மட்டும் இங்கே பார்க்கலாம். ஒன்று கல்விச்சாலைகள். பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஏன் நடத்தப் படுகின்றன? நாம் என்ன நினைக்கிறோம்? மக்களுக்கு அறிவு வளரட்டும் என்பதற்காகத்தான் பள்ளிக்கூடம் நடத்தப்படுவதாக நம்புகிறோம். அதில் நமக்கு சந்தேகமே இல்லை. ஆனால் நாம் ஒரே ஒரு கேள்வியைக் கேட்க மறந்து விடுகிறோம். இந்தக் கல்லூரிகள், பள்ளிகளை நடத்துவது யார்? எந்தத் தொழிலாளி வர்க்கமும் பள்ளிக்கூடம் நடத்துவதில்லை.

பெரும்பாலும் அரசுதான் நடத்தி வருகிறது. எந்த அரசு?அதே வலதுசாரி அரசுதான். அதே முதலாளித்துவ அரசுதான். அதே ஆளும் வர்க்க அரசுதான். நம்மை காலம் காலமாக ஒடுக்கிவரும் அரசுதான். அப்பேர்ப்பட்ட ஒரு அரசு நமக்கெல்லாம் அறிவு வளரட்டும் என்று பள்ளிக்கூடம் நடத்துகிறது என்று சொன்னால் . . . ? அந்த அறிவு எப்படிப்பட்ட அறிவாக இருக்கும்?

கொஞ்சம் யோசித்துப் பார்ப்போம். இந்திய அரசின் புள்ளி விவரப்படி முதல் வகுப்பில் 100 குழந்தைகள் சேர்ந்தால் அதில் 4

Scanned by CamScanner

குழந்தைகள்கூட +2 வகுப்பைத் தாண்டுவதில்லையாம். இதுதான் இந்தியாவின் தேசிய சராசரி. ஆக நூத்துக்கு 96 குழந்தைகள் பெயில் ஆகின்றனர் அல்லது படிப்பைப் பாதியில் விடுகின்றனர். அந்தக் குழந்தைகள் மனநிலை எப்படி இருக்கும்? தோற்றவனின் மனநிலை. குற்ற உணர்வுள்ள மனநிலை. நாமதான் பெயிலாயிட்டோம். . . கிடைக்கிற வேலையைச் செய்து பிழைத்துக் கொள்வோம். என்று கிடைப்பதை ஏற்றுக் கொள்கிற ஒரு மனநிலை 96% குழந்தைகளுக்கு பள்ளிக்கூடங்களால் உருவாக்கப்படுகின்றன. (பள்ளிக்கூடத்துக்கே போகாத பிள்ளைகள் பெயிலாவதில்லை. குற்ற உணர்வுக்கும் ஆளாவதில்லை!)

தனக்குத் தகுதியான ஒன்றுக்காகப் போராடாமல் கிடைப்பதை ஏற்றுக்கொள்பவன் அடிமை அல்லவா? ஆம். 96 % குழந்தைகள் அடிமைகளாக பண்படுத்தப்பட்டு பள்ளி கல்லூரிகளை விட்டு வெளிவருகிறார்கள். முதலாளிகளுக்கு இந்த மாதிரி கிடைக்கிற வேலையை - கொடுக்கிற சம்பளத்துக்கு ஒண்ணாப்புப் பிள்ளை களைப் போல கையைக்கட்டி வாயைப்பொத்தி ஏற்றுக் கொள்கிற தொழிலாளிதான் வேண்டும். அதைத்தான் கல்விச் சாலைகள் செய்கின்றன.

இது பெயிலானவர்களின் கதை என்றால் நல்லாப் படிச்சு பாஸ் ஆனவர்கள் கதை என்ன?பாஸ் ஆன பிள்ளைகள் அடக்க ஒடுக்கமாக எந்த வம்பு தும்புக்கும் போகாமல் ஊர்ப் பிரச்னை, நாட்டுப் பிரச்னை எதைப்பற்றியும் கவலைப்படாமல் தான் உண்டு தன் படிப்பு உண்டு என்று இருப்பார்கள். இப்படி ஆள்களைத்தான் முதலாளி எதிர்பார்த்துக் காத்திருக்கிறான். அதை பள்ளிக்கூடங்கள் அரசாங்கச் செலவில் -மக்கள் வரிப்பணத்தில்- தயாரித்து வழங்குகின்றன. இதைத்தான் பண்பாட்டின் அரசியல் என்கிறோம்.

இதே போல சாதி என்பது இந்தியாவின் வர்க்க ஏற்பாடு மட்டுமல்ல அது ஒரு பண்பாட்டு நிறுவனமும்தான். பிறப்பினால் ஒருவனை செருப்புத் தைக்கவும் ஒருவனை பூசை செய்யவும் என மறுப்பின்றி மனரீதியாக ஒப்புக்கொள்ளும்படிக்கி பாடம் செய்கிறது சாதி. தொழிலாளி வர்க்கம் சாதிகளாக தங்களைப்பிரித்துப் பார்ப்பதால் யாருக்கு லாபம்?

ஒரே ஒரு உதாரணம். திருநெல்வேலி மாவட்டம் மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளிகள் தங்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளுக்காகப் போராடியபோது போலீசாரால் தாக்கப்பட்டனர். 17 பேர் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்ட னர். ஆனால் தமிழகத் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியினர் மட்டுமே இதை ஒரு வர்க்கப் போராட்டமாகப் புரிந்துகொண்டனர். அவர்களுக்கு ஆதரவாக நின்றனர். பெரும்பகுதி தமிழ்த் தொழி லாளிகள் மாஞ்சோலைப் போராட்டத்தை தாழ்த்தப்பட்ட சாதி

Scanned by CamScanner

மக்களின் போராட்டமாகப் புரிந்துகொண்டு "கொல்லப்பட்டது ஒண்ணும் நம்ம ஆளுக இல்லியே" என்று இந்தப் படுகொலைகளைக் கண்டும் கொந்தளித்து எழாமல் மௌனமாக இருந்துவிட்டனர். நாம் சாதிகளாகப் பிரிந்திருப்பது முதலாளிகளுக்குத்தான் லாபம். சாதி வித்தியாசம் பார்க்கும் தொழிலாளி தன் தலையிலே தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொள்கிறான் என்று அர்த்தம்.

அடுத்தது மீடியா. இன்று முதலாளித்துவ ஜனநாயகத்தில் மீடியா எனப்படும் ஊடகங்கள் அதாவது பத்திரிகைகள், சினிமா, தொலைக்காட்சி, இணைய தளம் போன்றவை மக்களின் மனங்களை முதலாளித்துவத்துக்கு சாதகமாகப் பண்படுத்துகின்றன. மீடியா இன்று ஒரு சக்திமிக்க பண்பாட்டு நிறுவனம்.

எம். ஜி. ஆர். அன்று பாட்டுப்பாடினார் "ஆண்டவன் உலகத்தின் முதலாளி அவனுக்கு நான் ஒரு தொழிலாளி" ரஜினிகாந்த் இன்று பாடுகிறார் "ஒருவன் ஒருவன் முதலாளி உலகில் மற்றவன் தொழிலாளி" விஜய்காந்த் படப்பாட்டு "எங்க முதலாளி நல்ல முதலாளி" என்கிறது.

ரொம்பப்பிரபலமான கதாநாயகர்கள் முதலாளியைக் கடவுள் ஸ்தானத்தில் வைத்துப்பாடுவது காலம் காலமாக நடக்கிறது. இதன் மூலம் முதலாளி-தொழிலாளி என்பது ஆண்டவன் சித்தம் என்று மக்களை நம்ப வைக்கிறார்கள். ஆண்டவன் அல்லது இயற்கை பொதுவுடைமையாகப் படைத்த இந்த பூமியை அடாவடி செய்து முதலாளிகள் காபந்து செய்து கொண்ட வரலாறு இப்படித் திரிக்கப்பட்டு மறைக்கப்படுகிறது.

வருகிற சினிமா அத்தனையும் கார்,பங்களா வைத்திருக்கும் பணக்காரர்கள் பற்றிய கதையாகவே இருக்கும். பீடி சுத்திப் பிழைக்கும் லட்சக்கணக்கான மக்களைப் பற்றியோ தீப்பட்டி ஒட்டிப் பிழைக்கும் சிறு குழந்தைகளின் வாழ்க்கை பற்றியோ எந்தத் தயாரிப்பாளரும் படம் எடுப்பதில்லை.

இந்த சினிமாக்களை தொலைக்காட்சிப் படங்களை மக்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்து - கடனை உடனை வாங்கியாவது தங்கள் மண்டைக்குள் ஏற்றிக்கொள்கிறார்கள். தொழிலாளிகளின் சொந்தச் செலவில் முதலாளித்துவத்துக்கு




Scanned by CamScanner

ஆதரவான கருத்துக்கள் தொழிலாளியின் மூளைக்குள் ஏற்றப் படுகிறது.

தொழிலாளிகள் - விவசாயிகள் எத்தனை சங்கம் வைத்து போராடுகிறார்கள்? சங்கம் - தொழிற்சங்கம் என்றால் என்ன? தொழிற் சங்கம் ஆரம்பிப்பது எப்படி? என்று எந்தப்பள்ளிக்கூடத்திலாவது சொல்லித்தருகிறார்களா? எந்தக் கல்லூரியிலாவது தொழிற்சங்கம் பற்றி ஒரு பாடம் இருக்கிறதா? இல்லையே. அது ஏன்? நாம் யோசிக்க வேண்டும்.

பள்ளிகளும்,சாதிகளும்,மீடியாக்களும் மட்டுமல்ல. மதம், குடும்பம் போன்றவையும் பண்பாட்டு நிறுவனங்கள்தான். முதலாளித்துவத்துக்கு ஆதரவாக நம் மூளைகளைப் பண்படுத்தும் நிறுவனங்கள்தான்.

தொல்லை மிகும் இவ்வுலகில் சுகமில்லை என்பதால் எல்லாம் அவன் செயல் என்று மக்கள் ஆண்டவனைச் சரணடைகிறார்கள். ஆதிகாலத்தில் இயற்கையோடு போராடிக் கொண்டிருந்த காலத்தில் மனிதனுக்கு எல்லாம் மர்மமாக இருந்தது . காடு எப்படி திடீரென்று தீப்பிடிக்கிறது. இடி-மின்னல்-புயல்-மழை எல்லாம் எப்படி எங்கிருந்து வருகிறது? எதுவும் அவனுக்குப் புரியவில்லை. புரியாததைக் கண்டு அவன் பயந்தான். பயம் பக்தியானது.

ஆனால் இன்றும் அவனது பயம் போகவில்லை. ஆகவே பக்தி யும் குறையவில்லை. இன்று நாம் இயற்கையைக் கண்டு பயப்பட வில்லை. ஆனால் ஒருவன் ஏன் பணக்காரனாகப் பிறக்கிறான். நாம் ஏன் ஏழையாகப் பிறந்தோம்? இந்த சமூகம் இயங்கும் விதிகள் பிடிபடவில்லை. எனவே இன்னும் சாமி கும்பிடுகிறான். இந்த பக்தியை ஆளும் வர்க்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது. பக்தியை ஒரு ஸ்தாபனமாக மாற்றி -அதாவது- மதங்கள் என்கிற ஸ்தாபனங்களை உருவாக்கி- உழைப்பாளிகளை “நம்ம கையிலே என்ன இருக்கு” என்று புலம்புகிறவர்களாக்கி பஜனைக் கோஷ்டி களில் சேர்த்து விடுகிறது. பிறகு இவர்களை வகுப்புவாதிகளாக மாற்றுவது எளிது.

குடும்பத்தில் ஆண்தான் முதலாளி போல சகல அதிகாரமும் உடையவனாக இருப்பான். பெண்களும் குழந்தைகளும் தொழிலாளி களைப் போல அவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். வெளியே இருக்கும் (!) முதலாளித்துவ அமைப்பை இயல்பான ஒன்றாக நாம் ஏற்றுக்கொண்டு அதன் விதிகளுக்கேற்ப ஒழுங்காக வாழ குடும்பங்களிலும் பள்ளிகளிலும் நாம் முறையாகப் பயிற்று விக்கப்படுகிறோம். ஜனத்தொகையில் பாதியாக இருக்கும் பெண்கள் வெளி உலகமே தெரியாமல் சோறு பொங்குவதும் பிள்ளை பெறுவதும் தான் உன் வேலை என்று வீடுகளின் அடுப்படிகளில்

Scanned by CamScanner

அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். வீட்டுக்கு பொறுப்பானவனாக இருப்பதுதான் முக்கியம் என்று குடும்பங்கள் நமக்கு பாடம் நடத்துகின்றன. நாட்டைப் பற்றிய பொறுப்பு நமக்குத் தேவை என்று குடும்பம் சொல்லுவதில்லை. முதலாளிகள் சொல்ல வேண்டியதை நம் குடும்பமே நமக்குப் போதிக்கிறது.

தொழிற்சங்கம் வைத்து முதலாளிக்கு எதிராக ஆவேசமாகப் போராடும் தொழிலாளிகூட பண்பாட்டு ரீதியாக அதே முதலாளி யிடம்தான் பாடம் படிக்கிறான். அது அந்தத் தொழிலாளிக்கே தெரிவதில்லை. இது பயங்கரமான பாலிட்டிக்ஸ் இல்லையா? இந்தப் பண்பாட்டு அடிமைத்தனத்துக்கு எதிராக பாட்டாளிவர்க்கப் பண்பாட்டை உருவாக்கி வளர்ப்பது அவசரமான தேவையாகும். அல்லது சாயங்காலம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் தொழிலாளி ஆர்ப்பாட்டம் முடிந்த அடுத்த நிமிடம் தியேட்ட ருக்குப்போய் அல்லது வீட்டுக்குப்போய் டி. வி. பெட்டி முன் அமர்ந்து தன் செலவில் முதலாளித்துவப் பாடம் படிப்பதுதான் தொடரும். டிவி., சினிமா இதையெல்லாம் பெரும் முதலாளிகள்தான் நடத்துகிறார்கள் என்பதை நாம் மறக்கலாமா?

நாம் "குடும்பம் வேண்டாம். சினிமா வேண்டாம்" என்று சொல்லவே இல்லை. உடம்பால் தொழிலாளியாக இருக்கும் நாம் உள்ளத்தால் முதலாளிகளுக்கு ஆதரவாகத் தயாரிக்கப்பட்டிருக்கி றோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் சொல்லு கிறோம். முதலாளித்துவ அரசு கொடுக்கும் பள்ளிப்படிப்பு மட்டும் பாட்டாளிக்குப் போதாது. தன் உண்மையான பூர்வீக வரலாற்றை அவன் பள்ளிக் கூடத்தில் படித்துவிட முடியாது. கூட்டாகச் சேர்ந்துதான் தேடிக் கற்க வேண்டும்.

குடும்பம், பள்ளிகள், ஊடகங்கள் என அத்தனை பண்பாட்டு நிறுவனங்களையும் மறுவார்ப்புச் செய்து நமக்கானவையாக அவற்றை மாற்ற வேண்டும். நமக்கான புதிய பண்பாட்டு இயக்கங் களையும்(நிறுவனங்களுக்கு மாற்றாக இயக்கங்கள்) நாமே உருவாக்க வேண்டும். அதுதான் நாம் நடத்த வேண்டிய கலாச்சார அரசியல். இது குறித்து விரிவும் ஆழமும் மிக்க உரையாடல்களை பாட்டாளிவர்க்கம் துவக்கியாக வேண்டும்.

பொருளாதாரப் போராட்டங்களுக்கு எவ்விதத்திலும் குறை வில்லாத அளவில் கலாச்சாரப் போராட்டத்தை தொழிலாளி வர்க்கம் நடத்தியாக வேண்டும்.

Scanned by CamScanner

## ஆகவே. . . .

அரசியல் என்பது அரசு சம்பந்தப்பட்டது. அரசு என்பது ஒருவர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக உருவான வன்முறைக்கருவி. தனிச்சொத்துக்கு ஆதரவாக-தனிச்சொத்தைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட கூலிப்படையின் நாகரீக(!) வடிவம்தான் அரசு. நீதி, நிர்வாகம், ராணுவம், போலீஸ்,சிறைச்சாலைகள் என்கிற இந்த நாகரீகப்படுத்தப்பட்ட சட்டைகளுடன் திரிவது பழைய கூலிப் படைதான். அதை நாம்-பாட்டாளிகள்-புரிந்து கொண்டுவிடாமல் இருப்பதற்காகத்தான் பள்ளிகள், சினிமாக்கள், கோயில்கள், சாதிகள் குடும்பப்புனிதங்கள் என்கிற பண்பாட்டு நிறுவனங்கள் செயல்படு கின்றன.

உண்மையான அரசியல் என்பது பொருளாதாரம் யார் கையில் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியதுதான். அதில் இரண்டே அரசியல்தான் இருக்கமுடியும். இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசியல். பொதுவுடைமை என்பது இடது. தனியுடைமை என்பது வலது. வேறு அரசியலே கிடையாது.

ஓட்டுப்போடுவதும் சட்டமன்ற-பாராளுமன்ற நடவடிக்கை களும்தான் அரசியல் என்று சிலர் இன்று நம்புகின்றார்கள். அது சாக்கடையாகிவிட்டது. ஆகவே அரசியலே வேண்டாம் சாமி என்று ஒதுங்கிவிடுகிறார்கள். ஆம். இதுதான் முதலாளிகளுக்குத் தேவை. உரிமை, சுதந்திரம், சமத்துவம் என்று பேசுவதுதான் அரசியல். அந்த அரசியலே வேண்டாம் என்று தொழிலாளி சொல்லிவிட்டால் எல்லாத்தையும் முதலாளிகளே பார்த்துக்கொள்ளலாம். எந்த மனித குணங்களும் இல்லாத உழைக்கும் எந்திரங்களாக தொழிலாளி களைப் பாவிக்கிற முதலாளித்துவம் நாம் மேலும் மேலும் அரசிய லற்றவர்களாக மாறுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

இப்போது பன்னாட்டு முதலைகளும் கூட்டுச்சேர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அதிநுட்ப அதிவேக அதிபயங்கர மின்னணு ஊடகங்கள் மூலமாக நம் மூளைகளைத் தகவமைக்கிறார்கள். பாருங்க... பாருங்க... பாத்துக்கிட்டே இருங்க... கேளுங்க. . கேளுங்க. . . கேட்டுக் கிட்டே . . இருங்க. . . . (அரசியலில் இருந்து விலகி )

ஆகவே அவர்கள் போடும் உத்தரவுப் படி நாம் அரசியலற்ற வர்களாகி போன் போட்டு பெப்சி உங்கள் சாய்ஸ் பாட்டுக்




கேட்பவர்களாகவும் கிரிக்கெட்டில் இந்திய வெற்றிக்காக வேட்டுப் போடுகிறவர்களாகவும் அவர்கள் சினிமாக் களை நம் செலவில் பார்த்துவிட்டு பொம் பிளைகளைப் பார்த்து ஜொள்ளு விடுகிறவர் களாகவும் நாம் பெற்ற பிள்ளைகளை எல்லையில் துப்பாக்கிகளுடன் பனியிலும் வெயிலிலும் நிறுத்தி முதலாளிகளின் சொத்துக்களைப் பாதுகாக்கிறவர்களாகவும் நம் துன்ப துயரங்களுக்கெல்லாம் காரணம் நம் விதிப்பயன் என்று நம்புகிறவர்களாகவும் மனைவி படைத்து வைக்கும் ருசியான சாம்பார் சோத்தில் சகல வர்க்கப் பிரச்னைகளையும் மறந்து விடுகிறவர்களாகவும்.....சீச்சீ... இப்படியே வாழ்ந்து முடிந்துவிடப் போகிறோமா? எத்தனை காலம்தான் இப்படியே வாழப்போகிறோம்?

முதலாளிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் நம் மீது திணிக்கும் “அரசியல் வெறுப்பு” என்கிற குணத்தை நிராகரித்து நமக்கான இடதுசாரி அரசியலை அடையாளம் கண்டு- வெறும் பார்வை யாளர்களாக நின்றுவிடாமல் அதில் உற்சாகமுடன் பங்கேற்ப வர்களாக மாற வேண்டாமா?அது பாட்டாளிகளின் சரித்திரக் கடமை அல்லவா?

முதலாளிகளின் ஆசையில் மண் விழும்படியாக -அவர்களின் கனவுகள் இற்று வீழும்படியாக-அவர்களின் சகல சதிகளும் உடைந்து நொறுங்கும்படியாக- உழைக்கின்ற மக்களாகிய நாம்-படிக்கின்ற மாணவர்களாகிய நாம்-வேலை தேடும் இளைஞர்களாகிய நாம்-அடுப்புப்புகையில் ஆயிரம் ஆண்டுகளாய் மூச்சுத்திணறும் பெண்க ளாகிய நாம்-சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம்-பாட்டாளி வர்க்கமாகிய நாம் அனைவரும் கரங்கள் இணைத்து சந்தேகத்துக்கு இடமே இல்லாத உறுதியான குரலில் ஓங்கி ஒலிக்க வேண்டிய இன்றைய யுகத்தின் முழக்கம்.




Scanned by CamScanner

## இன்னும் சில கேள்விகள். . .

(இச்சிறு நூலை அச்சுக்கு அனுப்புவதற்கு முன் கைப்பிரதியை சில தொழிலாளத் தோழர்களிடம் வாசிக்கக் கொடுத்து அபிப்ராயம் கேட்டோம். அவர்கள் எழுப்பிய சில கேள்விகள். . )

**கேள்வி 1: எல்லாக்கட்சிகளையுமே இடது வலது என்று பிரித்துப் போட்டுவிட முடியுமா?இடையில் எதுவுமே இல்லையா?**

பதில் : தனியுடைமைக்கு ஆதரவா பொதுவுடைமைக்கு ஆதரவா என்கிற கேள்வியை முன் வைக்கும்போது இரண்டுக்கும் இடையில் யாரும் நிற்க முடியாதல்லவா? சில கட்சித் தலைவர்கள் நாந்தான் காரல்மார்க்ஸின் உண்மையான வாரிசு என்றெல்லாம் பொதுக் கூட்டங்களில் பேசலாம் அறிக்கைகளில் எழுதிவைக்கலாம். அதைவைத்து மட்டும் அக்கட்சியை மதிப்பிட முடியாது. நடைமுறையில் அக்கட்சி பாட்டாளி வர்க்கத்துக்கு ஆதரவாக இருக்கிறதா தனிச்சொத்தை பொதுவுடைமையாக்கும் திட்டம் வைத்துச் செயல்படுகிறதா என்பதைப் பார்த்துத்தான் சொல்ல முடியும்.

அதே சமயம் தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் தோன்றிய காலத்தில் அது உயர்சாதி ஆதிக்கத்துக்கு எதிராக-ஒடுக்கப்பட்ட சாதிகளின் குரலாக-பிரதேச மக்களின் நலன்கள் புறக்கணிக்கப் படுவதை எதிர்த்து ஒரு ஜனநாயக இயக்கமாகத்தான் பிறப்பெடுத்தது. அதன் சரித்திர முக்கியத்துவத்தையும் ஜனநாயக உள்ளடக்கத்தையும் நாம் மறப்பதற்கில்லை. அதற்கு உரிய மரியாதையை பாட்டாளி வர்க்கம் தர வேண்டும். ஆனால் இப்படித் தோன்றும் பல இயக்கங்கள் காலப்போக்கில் - தம் வளர்ச்சிப் போக்கில் யார் பக்கம் நின்றன-நிற்கின்றன என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். 'இறுதியாக' அவை இடதா வலதா என்று பார்க்கவேண்டும்.

**கேள்வி 2 : காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்த போது வங்கிகளை தேசிய உடைமை ஆக்கியது. அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்காலத்தில் தனியார் பஸ்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இதெல்லாம் இடதுசாரித் தன்மையுள்ள நடவடிக்கைகள் இல்லையா? இக்கட்சிகளை எப்படி வலது சாரிகள் பட்டியலில் வைக்க முடியும்?**

பதில் : வங்கிகள் தேச உடைமை ஆக்கப்பட்டதனால் லாபமடைந்தது யார்? நாடு பூராவிலும் உள்ள மக்கள் சேர்க்கும் சேமிப்புப் பணம் வங்கிகள் மூலம் பெரிய முதலாளிகளின் ஆலைகளுக்கு கடன் என்ற பெயரில் மூலதனமாகப் போய்ச் சேர்கிறது. தன் பணத்திலிருந்து பத்துப்பைசா கூட முதல் போடாமல் பேங்க் லோன் வாங்கியே முதலீடு செய்து முதலாளிகள் லாபம் அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

Scanned by CamScanner

இம்முதலாளிகள் திருப்பிக்கட்டாத லோன்தான் வங்கிக்கடனில் பெரும் தொகையாகும். இதுதான் தேசவுடைமையின் அரசியல். நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்குமாங்கே புசியுமாம் என்பது போல நமக்கும் சில வங்கிகளில் நகைக்கடனும் இதர சில சில்லறைக் கடன்களும் கிடைக்கின்றன. ஆனால் வங்கிகள் தேசஉடைமை இடதுசாரித் தன்மையுள்ள நடவடிக்கைதான். அதனால்தான் இந்த நடவடிக்கைகளை இடதுசாரிக்கட்சிகள் ஆதரித்தன.

தவிரவும் மக்களிடம் ஓட்டு வாங்கித் தொலைய வேண்டிய நிலை இருப்பதால் அவ்வப்போது இது போன்ற சேமநல நடவடிக்கைகள் ஒன்றிரண்டு செய்தாக வேண்டுமே. எனவே இப்படி ஒரு சில நடவடிக்கைகளை மட்டும் வைத்து ஒரு கட்சியை இடதுசாரி என்று சொல்லிவிட முடியாது.

**கேள்வி 3 : இன்று இந்தியாவில் உள்ள பல பிராந்தியக் கட்சிகளின் தலைவர்கள் சாதாரண குடும்பங்களில் பிறந்து வளர்ந்தவர்கள்தானே அவர்களுக்கு பசி வறுமை என்றால் என்ன என்பதெல்லாம் தெரியும்தானே. அப்படி இருக்க அவர்கள் ஏன் பொதுவுடைமைக்கு ஆதரவாக இடதுசாரிகளாக இல்லாமல் இப்படி ஆனார்கள்?**

பதில் : உலகை அடக்கி ஆள நினைத்த ஹிட்லர் கூட ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர்தான். பிறப்பு மட்டும் ஒருவருடைய அரசியல் கொள்கையைத் தீர்மானித்து விடுவதில்லை. அப்படிப் பார்த்தால் இன்று நம் நாட்டில் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் 50 கோடிப்பேரும் இடதுசாரிகளாக அல்லவா இருக்க வேண்டும். இல்லையே?

வர்க்க வேறுபாடுகள்தான் அடிப்படை என்பதை இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை. பண்பாட்டு ரீதியாக அவர்களின் மனங்கள் தனியுடைமைக்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டுள்ளன. முதலாளித்துவ அமைப்புக் குள்ளேயே பாட்டாளிகளுக்கு சில நன்மை செய்தால் போதும் என அவர்கள் நினைக்கலாம். ஆனால் பாட்டாளிகளுக்குத் தேவை சில சலுகைகளும் ஊதிய உயர்வுகளும் அல்ல. அதிகாரம். அரசியல் அதிகாரம். எல்லாவற்றையும் பொதுவுடைமை யாக்குகின்ற அதிகாரம். இந்த சிந்தனை அத்தலைவர்களுக்கு இல்லை. அல்லது பிடிக்கவில்லை.

**கேள்வி 4 : மேற்குவங்கத்தில் சோசலிசம் வந்துவிட்டதா?**

பதில் : இந்தியா ஒரு சோசலிசக் குடியரசு என்று பிரகடனம் செய்துவிட்டு அடுத்த வரியிலேயே தனிச்சொத்து வைத்திருப்பது அடிப்படை உரிமை என்று பேசுகிற நமது அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு இயங்குவதுதான் மேற்குவங்க அரசும் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே அங்கே மட்டும் சோசலிசம்

Scanned by CamScanner

கொண்டுவர முடியாது. ஆனால் அங்கே இடதுசாரிகள் ஆட்சியில் இருப்பதால் ஸ்ட்ரைக் செய்யும் தொழிலாளிகளை அந்த அரசு போலீஸை விட்டு அடிக்காது. டிஸ்மிஸ் செய்யாது. சிறையில் அடைக்காது. இருக்கிற சட்டங்களை வைத்துக்கொண்டு அதிக பட்சமாக பாட்டாளி வர்க்கத்துக்கு சேவை செய்கிற அரசாக அது இருக்கிறது. சோசலிசத்துக்கான போராட்ட வடிவங்களில் ஒன்றாக மேற்குவங்க சட்டமன்றமும் பயன்படுத்தப்படுகிறது. இதை அம் மாநில மக்கள் புரிந்துகொண்டதால்தான் கடந்த 30 ஆண்டுகளாக மீண்டும் மீண்டும் இடதுசாரிகளுக்கே வாக்களிக்கிறார்கள்.

❖ ❖ ❖

**நன்றி:**

1. அரசு - லெனின்
2. அரசும் புரட்சியும் - லெனின்
3. இடதுசாரிக் கம்யூனிசம் இளம் பருவக்கோளாறு - லெனின்
4. குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் - ஏங்கல்ஸ்
5. அடிமை முறையும் தமிழகமும் - ஆ. சிவசுப்பிரமணியன்
6. தமிழர் வரலாறும் பண்பாடும் - நா. வானமாமலை
7. பொற்காலங்கள் - ஆ. சிவசுப்பிரமணியன்
8. பண்பாட்டு அசைவுகள் - தொ. பரமசிவன்
9. கோவில் நுழைவுப்போராட்டங்கள் - கோ. கேசவன்
10. எது ஜனநாயகம்? - எஸ்.ராமகிருஷ்ணன், காந்தீயம் பப்ளிகேஷன்ஸ் தூத்துக்குடி
11. தமிழ் அடையாளம் கலந்துரையாடல் - புது விசை காலண்டிதழ்
12. The politics of privatization - Abhimanyu publications
13. My Vote Counts - TULIKA

---

அச்சு: பிரிண்டெக், சென்னை-5, படங்கள்: வின்ஸி
முதற்பதிப்பு: 2004 | 20 ஆம் பதிப்பு 2015

Scanned by CamScanner



**ச.தமிழ்ச்செல்வன்** விருதுநகர் மாவட்டம் நென்மேனி மேட்டுப்பட்டியில் பிறந்தவர். மதுரகவி பாஸ்கரதாஸின் மகள் வயிற்றுப் பேரன். பட்டப்படிப்பை முடித்து இந்திய ராணுவத்தில் பணியாற்றிய இவர் அங்கிருந்து நேரடியாக அறிவொளி இயக்கத்தின் செயல்பாட்டாளராக புழுதிவீசும் தமிழகக் கிராமங்களில் கால்பதித்தார். 80களில் தமிழின் மிகச் சிறந்த சிறுகதையாளராக அறியப்பட்டார். மாற்றுக் கல்வி செயல்பாடுகளில் ஆர்வமுள்ள இவர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர்.

அரசியலே சாக்கடை நல்லவர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள்
வசதியிருந்தால்தான் அரசியலில் ஈடுபட முடியும்
அரசியலில் எல்லா அசிங்கங்களும் சகஜம்
யாராலும் அரசியலை சுத்தப்படுத்த முடியாது.
இது போன்ற வாதங்கள் எப்போதும் காற்றில் உலவுகின்றன.
எதார்த்தம் போலவும், உண்மை போலவும் தோற்றம் தரும்
இத்தகைய கருத்துக்கள் எங்கிருந்து பிறக்கின்றன?
இவை தற்செயலாக தோன்றிய கருத்துக்களா?
பெருவாரியான ஏழை, எளிய மக்களை அரசியலிலிருந்து
விலக்கி வைத்து அரசியல் அற்றவர்களாக
மாற்றும் திட்டமிட்ட முயற்சியின்
ஒரு பகுதிதான் இத்தகைய வாதங்கள்
என்பதை எளிமையாகவும், ஆணித்தரமாகவும்
நிறுவுகிறது இப்புத்தகம்.

யார் வேண்டுமானாலும் வாசித்து விடக்கூடிய
எளிய நடையில் அமைந்தது இச்சிறு நூல்.

0010610

thamizhbooks.com பாரதி புத்தகாலயம் புதிய புத்தகம் பேசுது

₹ 20/-

9 788189 909192 23

Scanned by CamScanner